நூலகம்

இலக்கியம்

மலர் 1
இதழ் 11
ஜூலை 1996

ஆசிரியர்:

நூலக ஞானி டாக்டர் பா. பெருமான் M.A., M.Lib.,Sc.,Ph.D.,



திரும்பு நூலகப் பணிகளில் சில

OPEN ACCESS IN LIBRARY

S.R. Ranganathan

June, 1996 - Just Released
Purchase - Read - Benefit

LIBRARY AND SOCIETY

OPEN ACCESS IN LIBRARY

S.R. RANGANATHAN

LIBRARY LITERATURE
6, MU. Va. St, Arumbakkam,
Madras - 600 106,
Phone : 484 5034.
1966

Rs.
15/-

ஐந்து லட்சணங்கள் : நூலகப் பஞ்ச சீலக் கொள்கைகள்

FIVE LAWS OF LIBRARY AND INFORMATION SCIENCE OF Dr. S.R.RANGANATHAN

த. கிருஷ்ணமூர்த்தி

புத்தக சாலைகளை எதற்காக ஏற்படுத்துகிறோம் என்ற காரணத்தை நாம் முதலில் அறிந்தாலேயே, அந்த லட்சியம் கைகூடுவதற்காள வழியில் நாம் செல்ல முடியும். புத்தகசாலையை முதலில் ஒரு சமுதாய ஸ்தாபனமாகக் கருத வேண்டும். புத்தகங்களின் மூலம் மக்களிடையே தூய உணர்ச்சியையும் அறிவையும் கிளப்பிப் பெருக்குவதுடன், பொழுது போக்குக்காகவும் பயன்படுத்த முடியும். உலகம் தோன்றிய நாளிலிருந்து மக்களிடையே நிலவி வந்த சிந்தனை மனோபாவப் போக்குகளைத் தம்மிடமே கொண்டிருப்பன புத்தகங்கள். மனித ஜாதியின் அறிவு வளர்ச்சியை வரிவடி வத்தில் புத்தகங்கள் செய்கின்றன.

ஐந்து லட்சணங்கள்:

1. புத்தகாலயங்களில் இருக் கும் புத்தகங்கள் பொது ஜனங்களின் உபயோகத் திற்கென்றும், வெறும் அலங் கார ஆடம்பரத்திற்கு அல்ல வென்றும் உணர்ந்து நடக்க வேண்டும்.

2. அவரவருக்குத் தேவையான புத்தகங்களைத் தேடித் தந்தாலேயே படிப்பின் மீது இருக்கும் ஆசை வளரும் என்பதை அடுத்தபடியாகக் கவனிக்க வேண்டும்.

3. எப்படி ஒவ்வொருவருக்கும் வேண்டிய புத்தகங்களைத் தேடித் தர வேண்டுமோ அதேபோல் கைவசம் இருக் கும் புத்தகங்களுக்கு வாச கர்களைத் தேட வேண்டும். அதாவது புத்தகாலயத்தின் புத்தகப் பொக்கிஷ அருமை களை மக்களின் கவனத்துக்குக் கொண்டு வரவேண்டியது முக்கியமானதாகும்.

4. மேற்கண்ட விதிகளின் படி புத்தகாலயப் பராமரிப்பில் 'மெனக்கெடல்' இல்லாத படியும் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்போதே வாச கருக்கு அலுப்புத் தட்டாது; சிப்பந்திகளும் அதிகமான பேருக்குச் சேவை செய்ய முடியும்.

5. முடிவான நூலகம் வளர்பிறைச் சந்திரனை ஒத்து வளர்ந்து கொண்டே போகும் ஸ்தாபனம்.

ஆதலால் அதற்கேற்றபடி பரிபாலனச் சீரமைப்பு இருக்க வேண்டியதாகும்.

1. படிப்பதற்கே புத்தகம்

●

படிப்பதற்கே புத்தகம், வெறும் அலங்காரத்திற்கு அல்ல என்பது அனைவருக்கும் தெரியும். இருந்தாலும் பழைய வாசனையின் சாயல்கள் இன்னும் நீங்கினபாடில்லை. ஒரு காலத்தில், அச்சுத் தொழில் ஏற்படுமுன், ஒவ்வொரு கையெழுத்துப் பிரதி புத்தகத்திற்கும் ஒரு தனி மேஜை இருந்தது. அப்புத்தகம் அம்மேஜையுடன் இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தது. ஆகவே அந்த நூலை அது இருந்த இடத்தில்தான் வைத்துப் படிக்கலாம். இது மேல்நாட்டின் பதினைந்தாம் நூற்றாண்டு நிலைமை. அக்காலங்களில் ஒரு பிரதியைத் தொலைத்து விட்டால் வேறு பிரதி கிடைப்பது அரிது. அதிலிருந்து பிரதி எடுப்பதென்றாலும் நிரம்பவும் சிரமமான காரியம். ஆகவே சங்கிலி போடுவதற்கு ஓரளவு நியாயம் உண்டு. மேலும் புத்தகங்களைக் காத்துப் பின் சந்ததியாருக்கும் உபயோகமாக வைக்க வேண்டுமென்ற எண்ணம் நிலவிய காலம் அது. அதனால் நூலைத் தேடி வந்தவர் எல்லோருக்கும் வேண்டிய வசதி அளிக்கத் தயங்கிய காலம். படிக்க வருபவனின்



யோக்கியதையை அறிந்து தகுந்த சிபாரிசுடன் வந்தாலேயே உபயோகிக்க அனுமதிக்கப்பட்டது. அதேபோலத்தான் நம் புராதன கால ஓலைச் சுவடி நூற்கோசங்களுமாகும். சிலருக்கே அவை பயன்பட்டன. முக்கியமாகச் சேகரிப்பைக் காத்துப் பின் சந்ததியாருக்குப் பிரதி பொறிக்கவே ஒரு மனிதனின் ஆயுட் காலம் பிடிக்குமென்றால் அவ்விதம் கண்டிப்பாக இருந்ததில் ஆச்சிரியமில்லை.

விடுதலை:

அச்சுக்கோப்பு கண்டு பிடிக்கப்பட்டுப் புத்தக உற்பத்தி பெருகவும் அதனை அடுத்துச் சங்கிலியிலிருந்து புத்தகங்கள் முதலில் விடுபட்டன. பிற்பாடு அவை பீரோக்களில் அலங்காரமாக வைக்கப்பட்டு பொறுப்பான சிலருக்கே வழங்கப்படலாயின. அடுத்தபடியாகப் படிக்க வந்தவர் கேட்கும் நூல் இருந்தாலே கொடுப்பதென்று இருந்தது. படிப்

பவர் பீரோவின் அருகில் அனுமதிக்கப்படுவதில்லை. அதனால் அவர் ஒரு புத்தகக் கோசத்தின் உள்ளுறையை அறியாதவர் ஆனார். தாம் கேட்டது கிடைக்காவிட்டாலும் வேறு எதிலும் நாட்டம் கொள்ள வசதியற்றுப் போயிற்று. பிற்பாடு சந்தாசெலுத்துவோருக்கெல்லாம் புத்தகங்கள் என்ற முறை வந்தது; அடுத்த படியாக இலவசம் என்றானது. நவீனப் புத்தகாலயங்களில் கதவுகளற்ற ஷெல்புகளில் வரிசைக் கிரமமாக அடுக்கியுள்ள புத்தகங்களை எல்லாம் வாசகர்களே நேரில் பார்த்துத் தமக்குத் தோன்றியதை எடுத்துக் கொள்ளக் கூடிய வசதியும் இப்போது வந்தாகி விட்டது. அது மாத்திரமல்ல. புத்தகசாலைச் சௌகரியங்கள் இல்லாத இடங்களில் வாசகர்களைத் தேடிப் புத்தகங்கள் அவரவர் ஜாகைகளுக்கு வருவதாயும் ஆகிவிட்டன. சிப்பந்திகளும் வாசகர்களின் ஆசை அபிலாஷைகளைக் கிளறிப் புதுப் புத்தகங்களைக் கொடுத்து தவும் சேவை அளவிற்கு இன்றைய நிலை எட்டியிருக்கிறது. அப்படி இருந்தும் இன்னும் பல இடங்களில் பத்தாம் பசலி முறைகள் ஒவ்வொரு விதமாக இருந்து வருவதும் கண்கூடு. அதனால் பல புத்தகாலயங்களில் புத்தகங்கள் மடிப்புகள் பிரிக்கப்படாமல் மங்கி உதிர்வதும் உண்டு. புத்தகம் பூஜை போட்டு வைக்க அல்ல; படிக்கத்தான் என்பதை இன்னமும் உணர்ந்து நடப்பாரில்லை.

ஆசை உண்டு, தைரியமில்லை:

சில நூலக அதிகாரிகள் மக்களுக்குச் சேவை செய்ய ஆசை உள்ளவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் எல்லாரையும் தங்கு தடையின்றி நவீன முறைப்படி அனுமதித்தால் திருட்டுப் போகாதிருக்க முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து சகலருக்கும் தடைகளற்ற வசதி அளிப்பதே நவீன முறையாகும். அதனால் வாசகர்கள் அதிகரிப்பதுடன் நூல்களின் பயனும் அதிகப் படும். கஷ்டங்களும் குறையும்.

இடம்:

படிப்பதற்குத்தான் புத்தகங்கள் என்றால் எந்த இடத்திலே புத்தகாலயங்களை வைத்தால் அதிகப் பேருக்குப் பயன்படுமோ அந்த இடமாகப் பார்த்து அவற்றை நிறுவ வேண்டும். புத்தகம் படிப்பதில் அதிக ஆர்வம் காட்டாத வரும் வந்த இடத்தில் வேடிக்கைக்கு எட்டிப் பார்த்து மனம் கவர்ந்து அங்கேயே இருக்கக் கூடிய இடமாகப் பொறுக்க வேண்டும். மேல் நாட்டுப் பெரிய நகரங்களிலே ஜனநடமாட்டமுள்ள இடத்தில் புத்தகாலயத்தை நிறுவி அந்நகரின் பல்வேறு பேட்டைகளில் கிளை நூலகங்களை ஸ்தாபித்து இவற்றின் மூலம் புத்தகங்களை விநியோகிக்கிறார்கள். தூரத்திற்காகப் பயந்து அந்த வாசகர்கள் வராதிருந்து விடுவதைத் தடுக்கவும், நேரத்தை மிச்சப்

படுத்தவுமே அவ்வாறு செய்யப் படுகிறது. போர்ச்சுகலின் தலை நகரான லிஸ்பனில் உள்ள ஓர் ஒய்யாரப் பூங்காவில் பகல் வேளையில் பொதுமக்கள் விச்ராந்தியாக உட்கார்ந் திருக்கும்போது அங்குள்ள நூல் நிலையத்தார், மோட்டார் வாகனத்தில் நூற்றுக்கணக்கான புத்தகங்களைக் கொண்டு வந்து படிக்க உதவுவதாக, பேராசிரியர் எஸ்.ஆர். ரங்கநாதன் கூறுகிறார். அவ்வளவு தூரம் அங்கே புத்தகச் சேவை வியாபித்திருக்கிறது.

மாதத்தில் மூன்றாம் வாரம்
வெளிவருகிறது.
நூலகம் இலக்கியம்

மக்களுக்குக் கவர்ச்சி தரும் இடத்தில் புத்தகாலயங்களை வைக்க வேண்டுமென்பது போலவே நல்ல கட்டிடங்களி லும் சௌகரியமான அறைகளில் அதாவது சகலரும் வந்து போகக் கூடிய இடத்தில் அமைய வேண்டும். அத்துடன் புத்த காலயங்களின் வேலை நேரமும் ஜனங்களுக்கு ஒத்ததாக இருக்க வேண்டுவது அவசியம். படிக் கத்தான் புத்தகங்களென்றால் பொது ஜனங்களுக்கு எப்போது படிக்க --மோ அந்த நேரத்தில் புதகாலயங்கள் திறந் திருக்க வேண்டும். எல்லா நேரங்களிலும் வாசகர்கள் வரக் கூடிய இடமாயிருந்தால், அது போலவே புத்தகாலயங்களும் திறக்கப்பட்டிருக்கலாம். அப்போது தான், படிப்பதற்கே புத்தகம், பூட்டி வைப்பதற்கல்ல' என்ற நியதியைக் கடைப்பிடித்ததாகும். வாரந்தோறும் ஏதோ சில தினங்களில் சில மணி நேரம் திறப்பது என்பது கூடாது. முக்கிய மாக விடுமுறை நாட்களிலும் மக்களின் ஒய்வு நேரங்களிலும் திறந்திருப்பது அவசியமாகும். மேல் நாடுகளில் ஞாயிறன்றும் புத்தகாலயங்கள் உண்டு. எல்லா நாட்களிலும், எல்லா விழிப்பு நேரத்திலும் திறந்திருப்பது மிகச் சிறந்ததாகும். லண்டன் சர்வ கலாசாலையில் மாணவர் ஒவ் வொருவரும் தமக்குத் தோன்றிய வேளையில் அர்த்த ராத்திரி யானாலும் படிக்க வசதியாக ஒவ்வொருவருக்கும் புத்தக சாலையில் சாவி தரப்பட்டிருக் கிறதாம். இதுவே இவ்விதியின் உச்ச நிலையாம்.

2. அனைவருக்கும் புத்தகம்

படிப்பதற்கே புத்தகம் என் பதுபோல் அனைவருக்கும் புத்தகம் என்பது அடுத்து வரும் இரண்டாவது விதி யாகும். ஏதோ சிலருக்கு என்றது போய்க் கால தேசங்களைக் கவனியாது சகலருக்கும் படிக் கப் புத்தகம் கிடைக்கும்படி அவரவருக்கு ஏற்றது தரவேண்டு மென்பதும் அடுத்த விதியின் அர்த்தமாகும். எப்படிக் கல்வி போதனை சகலருக்கும் வேண் டும் என்கிறோமோ அதே போலப் புத்தகங்களும் சகலருக்

கும் கிடைக்க வேண்டும். அதுவே நாகரிகத்தின் முதிர்ச்சிக் கான அறிகுறி.

மேலை நாடுகளில் வெகு காலமாகக் கல்விபோதனை மேற்குலத்தாருக்கு மட்டுந் தான் என்று இருந்துவந்தது. கிரீசிலும், ரோமாபுரியிலும் அப் படித்தான் இருந்தது. பதினெட் டாம் நூற்றாண்டில்கூட அவனவன் தொழிலுக்கான தன்றிப் பொது விஷயங்களைத் தெரிவிக்கக் கூடாதென்ற வாதம் இருந்தது. அப்படி தெரிந்து கொண்டால் தொழில் குறையும் என்றும் அடக்கம் சிதறுமென் றும் கூறப்பட்டது. 1817ஆம் ஆண்டில் வசித்த ஓர் ஆங்கி லேயத் தையற்காரன் தன் வாடிக் கைக்காரர்களுக்குப் பயந்து ரகசிய மாகப் புத்தகங்களைச் சேர்த்து வைத்துக் கொண்டு வாசித்தானாம். அப்படிச் செய்திராவிட்டால் இந்தத் தையற்காரன் தன்னைப் பெரிய மனிதனாகக் கருதி இறுமாப்புடன் இருப்பதாக வாடிக் கைக்காரர்கள் நினைத்து வாடிக்கை தராது நின்றுவிடு வார்கள் என்று அவன் பயந்தா னாம். அக்காலத்திலும் பிரிட்ட னில் உயர் குலத்தோர் தாம் படிக்கலாம் என்ற நினைப்பு இருந்து வந்திருக்கிறது. 1918இல் பொதுஜனக் கல்வி மசோதா பிரிட்டிஷ் பார்லிமெண்டின் விவா தத்துக்கு வந்தபோது இடைய னுக்கும் உழவனுக்கும் வண்ணா னுக்கும் கல்வி போதிப்பதால் அவரவர் தொழில் எப்படி நடக்கும் என்று ஒருவர் கேட்டா ராம். அந்தக் காலத்திலும் நூலகங்கள் ராஜீய போதனைக் கூடங்களாகிவிடுமே என்று பயந்தனராம். அவை புரட்சிக்கு அடிகோலும் என ரஷ்யாவில் கருதப்பட்டதாம். அத்தகைய பெரிய பிருகஸ்பதிகள் நம் நாட்டில் அவ்வளவாக இல்லா விட்டாலும் ஓரளவுக்கு அதே போக்கில் இருக்கத்தான் செய் கிறார்கள்.

மேலை நாடுகளில் கைத் தொழிற் புரட்சிக்கு முன் நிலவி நின்றது வேளாளர் நாகரிகம். ஆகவே மக்கள் கிராமங்களில் பரவி நின்றனர். கைத்தொழிற் புரட்சி ஏற்பட்டதும் மேலை நாடுகளில் காடும் கரம்புமாய் இருந்த இடங்களில் தொழிற் சாலைகளை நிறுவி ஜனங்கள் கூடலாயினர். புதுப் புதுப் பட்டணங்கள் கிளம்பின. கிராமத் தில் இருந்த ஜனங்களாதலால் அவர்கள் புது இடத்திற்கேற்ற வாழ்க்கை முறைமை தெரியாது, அசிங்கமாக வாழ்க்கை நடத் தினர். அதனால் மேற்குலத் தோர் தாம் மட்டும் ஒதுக்குப் புறமான புறநகரங்களில் வசிக்கலா யினர். அதே சமயம் ஆயிரக் கணக்கான உழைப்பாளிகள் நெரி சலான அழுக்கடைந்த பேட்டை களில் வசிப்பாராயினர். அதனால் நோயும் நொடியும் மல்கின. அறியாமையால் அவை முற்றின. இது மேலோர் உள்ள இடங் களுக்கும் பரவியது. அதனால் சேரிகளாய் விளங்கிய பேட்டை வாசிகளுக்கும் சுத்தமாயும் ஆரோக்கியமாயும் வாழும் விதத்தைச் சொல்லிக் கொடுக்க நேர்ந்தது. அப்படி இருந்தாலே

அவர்களை வாட்டும் வியாதிகள் தம்மையும் பற்றாதிருக்கச் செய்ய முடியும் என்பதை மேற்குலத்தோர் கண்டனர்.

அனைவருக்கும் இலவச கட்டாய கல்வி, அனைவருக்கும் புத்தகம்:

ஆடம் ஸ்மித் என்ற அறிஞர் அது மாதிரியான கல்வி போதனைக்கு ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்பாடு செய்தாலே மௌடீகம், சண்டை சச்சரவு குணம் ஒழிந்து மற்றவர் போல் சாமானிய மக்களும் அடக்க ஒடுக்கம் தெரிந்து ஒழுகுவர் என்றார். 1807இல் பிரிட்டனில் சர்வ ஜனக் கல்வி மசோதா கொண்டு வந்தது எடுபட வில்லை. அதனை அடுத்துப் பாமரர் படிப்பில் அக்கறையுள்ள அறிவாளிகள் பாமரருக்கு அறிவு புகட்ட வேண்டி அதற்கென்று ஒரு ஸ்தாபனம் அமைத்துச் சொற்ப விலையில் பாமரர்களுக்கான புத்தகங்களை வெளியிட்டனர். அவர்களுடைய இடைவிடா முயற்சியால் 1891இல் சர்வஜன இலவசக் கல்வி சட்டமாயிற்று. எப்பொழுத கல்வி சர்வ ஜனங்களுக்கும் என்று ஆனதோ அதனை அடுத்துச் சகலருக்கும் புத்தகம் என்றது அடுத்த படியே உதயமாயிற்று.

பெண்கள் நிலை:

பெண்கள் ஆடவர்களைப் போல அவ்வளவு மூளை உள்ளவர்கள் அல்ல என்றே மேலை நாடுகளும் நினைத்த காலம் உண்டு. அறிஞர் அரிஸ்டாட்டில் முதல் ரூஸ்லோ வரையில் அப்படித்தான் நினைத்தார்கள். அதற்குச் சுவிசேஷ விவிலிய நூலினின்றும் ஆதாரம் காட்டினார்கள். விஞ்ஞானத்தையும் தமது கூற்றுக்கு ஆதாரமாக்க முயன்றார்கள். பெற்றதாய் படித்திருந்தாலே பிறக்கும் பிள்ளைகளும் அறிவாளிசளாய் இருக்க முடியும் என்பது பிற்பாடு ஏற்கப்பட்டது. அதனை அடுத்துப் புத்தகங்கள் பாமரருக்கும் என்பது போலப் பெண்டிருக்கும் என்பது ஏற்கலாயிற்று. அவர்கள் எத்தொழிலைச் செய்தாலும் வீட்டிலேயே இருந்தாலும் படிப்பும் புத்தகமும் அவர்களுக்கும் அவசியமாயின.

முகமூடியிட்டு, கோஷாவிலிருக்கும் பெண்ணானாலும், சிசு சம்ரட்சணைக்கான நூல்களை அவள் அறிந்திருக்க வேண்டுவது அவசியம் என்று ஏற்கப்பட்டு விட்டது.

காலமென்ற மாபெருங்கடல் நடுவே அமைந்த கலங்கரை விளக்கங்கள், புத்தகங்களே.

- விப்பிள்

கலங்கரை விளக்கம்

கிராமவாசிகளுக்கு:

சகலருக்கும் புத்தகமென்றால், நூல் நிலையங்களை நிறுவ முடியாத கிராமங்களின் நிலைமையாவது என்ன? பட்டிக் காட்டான் என்ற இழி மொழிக்கே அவன் என்றென்றும் வசப்பட்டிருப்பதா? நமது தேசத்தில் பெரும்பாலோர் வாழ்வது கிராமங்களிலாகும். அவர்களுக்குக் கல்வி அறிவு ஏற்படுவது எங்ஙனம்? இந்தியா பூரண சுதந்திரக் குடியரசாகி விட்டது. வயது வந்தவர்களெல்லோருக்கும் வாக்குரிமை என்றாகிவிட்டது. யாவரும் இந்நாட்டு மன்னர்களாகிவிட்டார்கள். அவர்கள் தம் வாக்குரிமையைச் சரிவரக் கையாள உலக விஷயங்களையும் முக்கியப் பிரச்சினைகளையும் அறிந்திருந்தாலன்றோ சாத்தியம்? அதற்குக் கல்வி அறிவுடன் பொது அறிவும் விரவியிருக்க வேண்டுமே. அதற்கான வழி என்ன? லட்சக் கணக்கிலும் கோடிக்கணக்கிலும் ரூபாய்களைச் செலவழித்து விவசாய ஆராய்ச்சி செய்யப்படுகிறது. அவ்வாராய்ச்சியின் பயன் ஆராய்ச்சிக் கூடத்துடனோ அல்லது விஷய நாட்டமுள்ள சிலருடனோ நின்றுவிடுகிறது. அதனால் ஆராய்ச்சிச் செலவு வீணாவதுடன் நாட்டின் விவசாயம் விருத்தியாகாமல் உணவுத் தட்டுப்பாடும் ஏற்படுகிறது. அந்த நிலை நீங்கும் மார்க்கம் என்ன? முதியோர் கல்வியும் சர்வஜனக் கல்வியும் நூற்கல்வியுமே. இதில் ஒன்றை ஒன்று பின்னிக் கொண்டிருக்கின்றது. இதனை அறிந்தே டென்மார்க்கு போன்ற விவசாயம் ஓங்கியுள்ள தேசங்களில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள கிராம மக்களுக்கென்று அவர்களுக்கு ஓய்வான காலங்களில் கல்லூரிகள் நடைபெறுகின்றன.

கும்பகோணம் வெற்றிலை டெல்லியிலும், பங்களூர் மாம்பழம் லண்டனிலும், கோழிக்கோடு முந்திரிப்பருப்பு வாஷிங்டனிலும் விற்கும் காலம் இது. ஆகவே அகவிலை விவரமும் விவசாயிகள் அறிந்திருந்தாலே தம் சிரமத்திற்குள்ள ஊதியத்தைப் பெறுவதுடன் இதர தேசங்களின் போட்டியைச் சமாளிப்பதற்கான வகை முறைகளையும் கானவும் ஊக்குவிக்கும். ஆஸ்திரேலியாவின் ஆப்பிள்களும், கிரீசின் உலர்ந்த திராட்சையும், பாலஸ்தீனின் அத்திப் பழமும் நாம் வரவழைப்பவையாகிவிட்டன. விவசாயமும் இப்போது கைத்தொழில்கள் போலப் பெரும் தொழிலாகிவிட்டது. நகரங்களுக்கும் கிராமங்களுக்குமுள்ள நாகரிய வித்தியாசங்களைப் போக்க முயன்றாலே படித்தவர் கிராமங்களில் தங்கி விவசாயத்தை விருத்தி செய்ய முயலுவர். அத்தகைய சமூகம் ஏற்பட நூல்களே பெரிதும் உதவும். ஆகவே ஒதுக்குக் கிராமங்களில் உள்ளாருக்கும் புத்தகங்களை தந்தாலே அனைவருக்கும் புத்தகம் என்ற நியதிக்கு நீதி செய்த வராவோம். தேச மக்களில் சகலரும்

அறிவாளிகளாக விளங் கினாலே தேசம் முன்னணியில் இருக்கும்.

3. படிக்காத புத்தகம் கூடாது

மூன்றாவதாகக் கவனிக்க வேண்டிய விதி, படிக்காத புத்தகம் கூடாது. அதாவது புத்தகால யத்தில் எந்தப் புத்தகத்தையும் படிக்காது வைத்திருக்கக் கூடாது. எல்லாப் புத்தகங் களும் கூடிய மட்டும் அடிக் கடி வாசகர் களிடம் சுற்றிக் கொண்டே இருக்கும்படியான நிலைமையில் இருக்க வேண் டும் என்பதாகும்.

அதிக விலை கொடுத்து அருமையான புத்தகங்களை வாங்கி வைத்துவிட்டு அதற் கேற்றபடி அவற்றை வாசிக்க ஆட்கள் கிடைக்காவிட்டால் நமக்கே அதுமாதிரியான அருமை யான புத்தகங்களை மற்றொரு முறை வாங்குவதற்குத் தயக்கம் ஏற்படும். அதற்காக அருமை யான புத்தகங்களை வாங் காதிப்பது என்பதும் கூடாது. ஆகவே புத்தகங்களுக்குப் புதப்புது வாசகர்களைத் தேடி வேண்டுவது அவசியம். வீரா ஆன்ஸ்டே என்பவர் இந்தியா வின் பொருளாதார அபிவிருத்தி பற்றி ஒரு புத்தகம் எழுதியிருக் கிறார். 1930இல் முதன்முதலா கப் பிரசுரமானது. இதன் விலை அப்போது ரூ.18. நல்ல புத்தகம்; சிறப்பான கட்டடமுடையது. 10 வருஷங்களுக்குள் இதன் புதுப்பதிப்பு புது விஷயங் களுடன் வெளியாகிவிட்டது. அதன் விலை ரூ.20. முதற்பதிப்பு அதிகம் கையாளப்படாததால் ஒரு புத்தகாலயத்தில் மறுபதிப்பு வாங்கியபோது முதற்பதிப்பும் கட்டடம் குலையாமல் அப் படியே இருந்தது. இதுமாதிரி அதிக விலைக்கு வாங்கி வைத்துவிட்டு அதற்கேற்றபடி வாசகர்கள் இராதபோது மீண் டும் அதிக விலை கொடுத்து அப்புத்தகம் வாங்குவது சரியா காது. நூலக அதிகாரிகளும் இதுமாதிரி அதிகம் உபயோகப் படாமலிருக்கும் புத்தகங் களுக்கு விசேஷ வாசகர்களைத் தேடி அதிக அக்கறை எடுக்க வேண்டும்.

திறந்த முறை :

படிக்காத புத்தகம் கூடாது என்பதனை அடுத்து நூலகத்தி லுள்ள புத்தகங்கள் என்ன என் பது வரும் வாசகருக்கு எளிதில் தெரிய, புத்தகப் பீடங்கள் வாசகருக்குத் திறந்து கிடக்க வேண்டும். சொந்தப் புத்தகங் களைப் போல எடுத்துப் பார்க்கும்

வசதிகள் நூலகப் புத்தக அடுக்கு ஏற்பாட்டிலும் இருக்க வேண்டும். அப்படி வைத்தாலே வாசகர் கள் இப்படியும் அப்படியுமாகப் புத்தகங்களைப் புரட்டிப் பார்க்கும் போது அதிகம் படிக்கப்படாத புத்தகங்களும் அவர்கள் கண் களில்படும். அவற்றில் ஏதேனும் இருக்குமோ என்று அவர்கள் மனம் தாவி எடுத்துப் படிக்க நேரலாம். இதுவரையில் இதைப் பார்க்கவில்லையே என வியப் பும் அவர்களுக்குத் தோன்றும். இது இருக்கிறது என்பது முன்னால் தெரியாமல் போயிற்றே என்பது போன்ற அனுபவம் ஏற்படக் காணலாம். வியாபாரி எப்படித் தன் சரக்குகளை வாடிக் கைக்காரர் எடுத்துப் பார்த்து வாங்கவிடுகிறானோ, அதைப் போலவே நூலகங்களும் இருக்கவேண்டும். இதனால் வெறும் பொழுதுபோக்குக்காக வரும் வாசகரும் சில புத்தகங்களைப் பார்த்துவிட்டு, 'அப்படியா சேதி?' என்ற அங்குள்ளவற் றைப் பார்த்துவிட்டு ஒழுங்காக நாள்தோறும் வரும் வாசகரா கவும் ஆகலாம்.

சமீபத்தில் சென்னையில் ஒரு புத்தகசாலையில் இந்த மாதிரி திறந்த ஏற்பாடு செய்த பிறகு வாசகர்களின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகமாயிருக்கிறது. இதனால் சில புத்தகங்கள் நஷ்ட மானாலும் பாதகமில்லை. நஷ் டத்தைவிட நன்மை அதிகம். திறந்த ஏற்பாட்டுடன் அதற் கடுத்த எச்சரிக்கைகளையும் எடுத்துக் கொண்டால் மூடு ஏற்பாட்டை விட நஷ்டம் அதிக மாகஇருக்க முடியாது.

இப்படிப்பட்ட நஷ்டங் களுக்கான திருடர்கள் வெகு சிலரே. அவர்கள், நூலக அதி காரிகள் எப்போது அஜாக்கி ரதையாக இருக்கின்றனர் என் பதை அடிக்கடி வந்து கவனித் துக் கொண்டு அதன் மேல் புத்தகங்களைக் களவாடுவர். புத்தகாலய நுழைவிலும், வெளிச் செல்வதிலும் அதிக கவனம் இருந்தால் மட்டுமே போதும்; திருட்டு நடக்காது. புத்தக நஷ்டத்தையும் காவலுக்கெனப் போடப்படுவோரின் சம்பளத் தையும் கணக்கிட்டால் திறந்த ஏற்பாட்டினால் நஷ்டம் அதிக மிராது என்பது தெரியும். மூடிய ஏற்பாட்டினால் புத்தகங்களில் ஏற்படும் தூசு தும்பு சேதாரம் இவற்றையும் கணக்கிட்டால் திறந்த ஏற்பாட்டின் நன்மை புலனாகும்.

கண் கவர் விளம்பரம் :

திறந்த ஏற்பாட்டுடன் புத்தக பீடங்களில் அடுக்க வரிசையும் வாசகர்களின் லகுவுக் கான வகையில் இருக்க வேண் டும். ஒவ்வொரு விஷயத்தைச் சேர்ந்த புத்தகங்கள் அதன் அதன் வரிசைப்படிக்கேற்ப வைக் கப்பட்டிருந்தாலே சௌகரிய மாக இருக்கும். புத்தகங்களும் வாசகர்கள் கண்களில் எளிதில் படும். அதனால் ஒவ்வொரு புத்தகத்திற்கும் வாசகர்களைப் பெறலாம். புத்தகம் வந்தவுடன் சில நாட்கள் தனியாக வைத்தும்

வாசகர்களைக் கவரலாம். மற்றும் புத்தகங்களை ஒரே பீடத்தில் எப்போதும் வைத்துக் கொண் டிராமல் அடிக்கடி அவற்றை இடம் மாற்றி மாற்றி அடுக்கி வைப்பதனால் வாசகர்களின் அவற்றை இடம் மாற்றி மாற்றி அடுக்கி வைப்பதனால் வாச கர்களின் கவனம் ஏதோ பழகிய இடத்தில் புதுப் புத்தகங்கள் இருக்கின்றனவே எனப் பார்க்கத் தூண்டும். அவற்றிலுங்கூட வாச கர்களின் கவனம் செல்லக் கண் களில் எளிதில் படிம்படி விஷய விளம்பரப் பலகைகளைப் பொருத்தி வைக்கலாம். நகரங் களில் முக்கியமாக ஜவுளி வியாபாரிகள் நவீன காலத்திற் கேற்ப வாசல் விளம்பரங் களையும் உள்பகட்டும் அலங் கார ஏற்பாடுகளையும் அடிக் கடி புதுத்தோற்றம் காட்டக் கூடிய வகையில் வசீகரமாய்த் திருத்தி அமைப்பது போலவே புத்தக அடுக்குகளை மாற்றி அலங்கரித்து வைக்கலாம். இது வாசகருக்கு ஒவ்வொரு சமய மும் புதுப்புது அனுபவமாக இருக்கும்.

அடுக்கு வரிசையின் படர்ப்பு தூரம் இரு கைகளின் (பாகம்) தூரத்துக்கு மேல் போகக் கூடாது. அதாவது பீடத்தின் அகலம் (புத்தக வரிசை அகலம்) ஒரு பாகத்திற்கு மேல் போகக் கூடாது. புத்தகங்கள் ஏக வரிசையாகவே இருக்க வேண்டும். பின் வரிசை இருந்தால் வாச கர்கள் கண்களில் பின் வரிசை யில் இருப்பவை படா. அதே போல அடித்தட்டில் குனிந்து எடுப்பதும் சிரமமாகையால் அத்தட்டுகளில் சாதாரண அளவுக்கு மேற்பட்ட பெரிய அளவு புத்தகங்களை வைப்பது நல்லது. அதேபோல மிகச் சிறிய பருமனற்ற அருமை யான துண்டுப் பிரசுரங்களைத் தனியாக வைப்பதே சிறந்தது. புத்தகப் பட்டியலில் எல்லாம் வரிசைக் கிரமமாக இருந்தாலும், அதில் ஒரு புத்தகம் சிறிய அளவானதா அல்லது சாதா ரண அளவுக்கும் மீறிய பெரிய அளவானதா எனக் குறிப்புக் காட்டிவிட்டுத் தனியாக அவற்றின் அளவிற்கேற்ப வைத்தல் நல்லது. சாதாரணப் புத்தகங்களுடன் சிறிய துண் டுப் பிரசுரங்களை வைத்தால் அவற்றின் இருப்பிடமே தெரி யாது போகும். பெரிய அள வுள்ள புத்தகங்களை வைத்தால் மற்றவற்றிற்கு இடைஞ்சல் ஏற்படும் என்பதுடன் வாச கருக்கும் என்ன அளவானது என்பதைக் காட்டினால் அவருக்கு வந்த நோக்கத்துக்குப் பயன் படுமா பயன்படாதா என்பதும் தெரிய ஹேதுவாகும். சொற்ப விஷயம் தெரிய வேண்டிய வருக்குத் துண்டுப் பிரசுரம் போதும். விரிந்த அளவில் வேண்டியவர் பெரிய புத்தகங்களை விரும்புவர்.

புத்தகங்கள் இருவகைப் படும். ஒரு வகை, போழுது போக்க உதவுகிறவை. மற்றொரு வகை, வாழ்க்கைக்கு உதவுகிறவை.

-ஏங்கிள்

4. கால விரயம் கூடாது

புத்தகாலயங்களில் கால விரயத்தைக் குறைக்க வேண்டியது அத்தியாவசியம். கால ஹரணத்தைக் குறைக்கத் திறந்த முறையும் பட்டியல் முறையும் பயன்படும் என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. பெரிய நூலகங்களில் இரவல் வாங்கிச் செல்லக்கூடிய ஆயிரக் கணக்கான வாசகர்கள் எடுத்துச் செல்லும் ஒவ்வொரு புத்தகத்தையும் பற்றிய குறிப்பையும் இரவல் பெறுவோரின் குறிப்பையும் எழுதிக் கொண்டு புத்தகங்கள் தருவதென்றால் நேரம் அதிகமாகும். ஆகவே ஒவ்வொரு நபருக்கும் அடையாளச் சீட்டுக் (டிக்கட்) கொடுக்கப்படுகிறது. அதே போல் ஒவ்வொரு புத்தகத்திலும் அதற்கான ஓர் அடையாளச் சீட்டு உண்டு. அது புத்தகத்துடன் ஒட்டப்பட்டிருக்கும் செருகு பையில் இருக்கும். எந்த நபராவது ஒரு புத்தகம் எடுத்துப் போவாராகில் தமது சீட்டுடன் எடுத்துப் போகும் புத்தகத்தின் சீட்டையும் இரவல் தரும் அதிகாரியிடம் கொடுத்து விட்டுச் செல்ல வேண்டும். மற்றப்படி எழுத்துக் குறிப்பு ஏதுமில்லை. நபர்ச் சீட்டுடன் அதில் இருக்கும் செருகு பையில் புத்தகச் சீட்டு செருகப்பட்டு, வர்க்கவாரியாக வைக்கப்படும். அதனால் ஒரு நபர் புத்தகத்தைத் திருப்பும்போது, அதற்கான சீட்டை எடுப்பது சுலபம். இதனால் காலவிரயம் குறைகிறது. ஓர் அங்கத்தினர் எத்தனை புத்தகம் இரவல் வாங்கலாமோ அத்தனை சீட்டுகள் அவருக்குக் கொடுக்கப்படும். நூலகத்தில் அவருடைய எத்தனை சீட்டுகள் இருக்கின்றனவோ அத்தனை புத்தகங்கள் அவருக்கு இரவல் கொடுக்கப்பட்டிருப்பதாய் அர்த்தமாகும். இதனால் மெனக்கெடல் இல்லை என்பதுடன் வேலை சுளுவாகிறது.

> புத்தகங்களை இரவல் கொடுக்காதீர்! யாரும் அவற்றை திருப்பிக் கொடுப்பதில்லை. என் பிரோவில் உள்ள புத்தகங்கள் எல்லாம் இரவல் வாங்கியவையே.
>
> - அனடோல் ∴பிரான்ஸ்

மூடிய முறையில் நாடும் புத்தகத்தைக் கேட்டு, அது இருந்தால் சரி, இல்லாவிட்டால் மறுபடியும் வேறொன்றைக் கேட்டு இப்படியாக ஒவ்வொன்றுக்கும் சிப்பந்தி உள்ளே சென்று, இருக்கிறது இல்லை என்று அறிந்து வரவே அதிக நேரம் பிடிக்கும். அப்படியும் பெறும் புத்தகம் பிறகு நமது நோக்கத்திற்குச் சரிப்படாவிட்டால், வேறு மாற்ற முன் போலவே சிப்பந்திகளுக்குத் தொல்லை கொடுப்பதுடன் நாமும் அலட்டிக்

கொள்ள வேண்டும். இது மாதிரி அடிக்கடி சிப்பந்தி களைக் கேட்டு வந்தால் நம் மிடம் அவர்களுக்கு அரு வருப்புத் தட்டும். ஆகவே, திறந்த முறையில் மெனக் கெடல் குறைவு என்பதுடன் திறமையாகவும் காரியம் நடக் கும். அதே லட்சியத்துடனேயே தற்காலத்தில் நவீன நூலகங் களின் புத்தகப் பட்டியல் கார்டு களில் எழுதப்படுகின்றன. புத்தகத்தின் பிரதானப் பதிவுக் கார்டில் அப்புத்தகம் சம்பந்த மான முழு விவரங்கள் இருக் கும். அப்புத்தகத்திற்கான இதரத் துறைகளின் வழியாகப் புத்த கங்களைத் தேடுவோருக்கும் அது இருப்பிடம் காட்டும். ஆகவே, பட்டியலும் இப்போது காலத்தைக் குறைக்கும் வகை யில் தயாரிக்கப்படுகிறது. பட்டி யலின் அகர வரிசையிலும் இருப் பதால் வாசகர்கள் பட்டியலைப் புரட்ட எளிதாகிறது. இதனால் ஒரு விஷயத்தைப் பற்றிய புத்தகமோ அல்லது தேடி வரும் புத்தகமோ அந்நூலகத்தில் இருக்கிறது அல்லது இல்லை என்பதனை ஒரு நிமிஷத்தில் அறிந்து விடலாம். நூலகத்தில் இருக்கும் புத்தகம் இரவல் கொடுக்கப்பட்டிருக்கிறதா, அல் லது இருக்காதா என்று அறிய, செருகு கார்டு முறை சிறப்பானது.

பீடங்களில உள்ள புத்த கங்கள் விஷயவாரியாய் அதன் அதன் உட்பிரிவுகளிலும் ஒழுங் குடன் அடுக்கி வைக்கப் பட்டு இருந்தால், வாசகரின் மெனக்கெடல் குறையும். அதிலும் ஒரே விஷயத்திலுள்ள புத்தகங்களை அதன் அதன் பிரசுர வருஷத்திற்கேற்ப முன்னது பின்னதாக வைத்திருந்தால் மிகவும் நன்றாக இருக்கும். வரிசையில் புது வெளியீடுகள் கடைசியில் இருக்க வேண்டும். இதிலும் தகவல் குறிப்புப் புத்தகங்கள், அகராதிகள் போன் றவை ஒரு பக்கமும், பாஷாவாரி யாகத் தனித்தனியாகவும் வைப் பதுடன் இவ்வரிசைகளில் அதிகமாக விசாரிக்கப்படுப வற்றை வாச்கர்களுக்கு அரு கிலும் வைப்பது நல்லது.

இன்ன இன்ன விஷயப் புத்தகங்கள், இன்ன இன்ன இடங்களில் இருக்கின்றன, இந்த இந்தப் பீடங்களில் எவ் வெவ்வகை நூல்கள் இருக் கின்றன என்பதனைக் காட்டும் விளம்பரங்கள் அந்த அந்த இடத்தில் எடுப்பாகப் போட்டி ருந்தால் வாசகர்கள் தடுமாறாது தமது நோக்கப்படி புத்தகங் களை எடுக்கச் சௌகரியப் படும். புத்தகத் தட்டுகளில் புத்த கங்கள் விஷயக் கிரமங்களில் அடுக்கப்பட்டிருக்கும். புத்தகத் தின் குறியீடுகள் மொத்தமான புத்தகமானால் அதன்கீழ் முது கிலும், மெல்லியதானால் பக்க வாட்டிலும் இருக்கும். அவற் றைக் கொண்டு வாசகர் தாம் தேடி வந்த புத்தகத்தைச் சுளுவில் எடுக்க லகுவாகும். அதேபோலப் புத்தகப்பட்டி யலும் பெரியதாக இருக்குமா னால் அதிலும், கார்டுகளின் பிரதான விஷயங்களைக் குறிக்க வேண்டும். இந்தக் குறியீடு

கார்டுகள் ஒவ்வொரு முக்கிய விஷயத்திற்கும் இருப்பது நல்லது. இதைக் கட்டியக் கார்டு எனலாம்.

மெனக்கெடலைக் குறைக்கக் கூடியது நூலக நிர்வாகியின் திறமையைப் பொறுத்ததாகும். பலருக்கும் பயன்படும் புத்தகாலயமானதால் சோம்பல் பாராது, சுறுசுறுப்பு உள்ளவராய், வாசகர்களை வசீகரிக்கக் கூடியவராய், அவர்களின் ஒத்துழைப்பையும் பெறக்கூடியவராய் அதே சமயம் கண்டிப்பாய் உள்ளவராய் இருக்க வேண்டும். புதுப்புது விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும், பிறருக்கும் தெரிவிக்க வேண்டும் என்ற மனப்போக்கு உடையவராய் இருக்க வேண்டும். புத்தகாலய அதிகாரியைப் பொறுக்குவதில் சிநேகிதன், ஜாதி, இனம் போன்ற பிரிவுக்கு இடந்தராது திறமைக்கே மதிப்புத் தர வேண்டும். பல இடங்களில் சிப்பந்திகள் விஷயத்தில் தாராளம் காட்டப்படுவதில்லை. புத்தகாலயத்துக்குச் சிப்பந்திகளைத் தாராளமாக நியமிக்க வேண்டும். புத்தகச் சேகரிப்புக்கும் வாசகர்களின் எண்ணிக்கைக்கும் தகுந்தது போலவே அதிகமாக நியமிக்க வேண்டும்.

ஆயிரக் கணக்கான புத்தகங்கள் வாங்கக்கூடிய ஒரு நூலகத்திலே ஆயிரம் புத்தகத்துக்கு உரிய பட்டியல் பாகுபாடு முதலிய விஷயங்களைப் பூர்த்தி செய்ய ஒருவருக்கு ஒரு வருஷம் பிடிக்குமெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே துரிதமாக நடக்க வேண்டிய இடங்களில் சிப்பந்திகளின் எண்ணிக்கைக்குப் பயப்படாமல் சரியான சேவை கிடைக்க அதிகப் பேர்களையே நியமிக்க வேண்டும். சாதாரணமாக மேலை நாட்டுப் புத்தகாலயங்களின் செலவு விவரங்களைப் பார்த்தால் சிப்பந்திகளின் சம்பளமே செலவீனத்தில் பாதிக்கு மேல் பெரும்பாகமாக இருப்பதைக் காணலாம். அப்படித் தாராளமாக இருந்தாலே நல்ல பலன் கிடைக்கும். பலரின் மெனக்கெடலைத் தவிர்க்க ஒரு சிப்பந்தி நியமனம் அதிகப்படி செய்வது சரியல்லவா?

நூலகங்களில் இருக்கும் ஆயிரக்கணக்கான புத்தகங்களின் உள்ளக் கிடக்கையை அறிவிக்கும் ஒலிபெருக்கிகளாய் அவர்கள் விளங்க வேண்டும். சில ஆங்கில அகராதிகளில் வெறும் சொல்லர்த்தம் மாத்திரமின்றி வாழ்க்கை



அறிவை வளர்ப்பதில் எல்லோருக்குமே ஆசையுண்டு அதற்குப் பேருதவிக் கருவிகளாக இருப்பவை நூல்களே!

(நூலும் அறிவும்)

-நேரு

வரலாறுகள், விவிலிய நூல் குறிப்புகள் இன்னோரன்ன உண்டு. இவை பல வாகர்களுக்குத் தெரியா. அவர்கள் இவற்றை வேற்றிடங்களில் தேடுவ துண்டு. அம்மாதிரியானவற் றைப் புத்தகாலயச் சிப்பந்திகள் ஏற்கனவே என்ன என்ன புத்த கங்களில் எது எது கிடைக்கும் என்பதை அறிந்து நாடிவரும் வாசகருக்கு அதற்கான இடம் காட்ட வேண்டும்.

நமது சர்க்கார் தாம் செய் யும் விஞ்ஞான ஆராய்ச்சி விஷயங்களைக் குறித்து ஆயி ரக்கணக்கில் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டிருக் கிறார்கள். அவை யாவும் வீணாகி வரு வதைப் பார்க்கிறோம். இதற்குக் காரணம் என்ன? வெளியிடும் புத்தகங்களுக்கும் அவற்றைப் படிக்க வேண்டியவர்களுக்கும் தொடர்பு ஏற்படுத்தக் கூடிய நபர் இல்லாமையே. இத்தகைய வேலையே முக்கியமாகக் கிராம நூலக அதிகாரிகள் செய்ய வேண்டியதாகும். கிராம உத்தாரணமே தேச உத்தாரணம் என்ற மனப் பான்மையில் மக்களைத் திருப்பித் தேசத்தின் ஐக்கிய முன்னேற்ற முயற்சியில் அனைவரும் ஈடு படும் வகையில் நூலக நிர்வாகி வேலை செய்தல் வேண்டும். ஜனங்களின் அறிவு அதிகமாக ஆக, திறமை ஏறும். சுகாதார மாகவும் சுத்தமாகவும் வாழ முயலுவர். இதனால் சுய நம் பிக்கை உதயமாகும். இவை ஜனநாயக ஆட்சிக்கு மிக அவ சியமானவை. ஒரு கிராமத்தின் புத்தகாலய நிலைமையைக் கொண்டே அந்தக் கிராமத் தாரின் மனோபாவத்தை அறிந்து விட முடியும்.

5. உயிருள்ள ஜீவன்

புத்தகாலயம் உயிருள் ளது. அது வளரும் ஸ்தாபனம் என்பதே நூலகத் தத்து வத்தில் முடிவாகக் கவனிக்க வேண்டியதாகும். பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற விதியைப் பூரணமாகப் பரிணமிப்பது.

ஆண்டுதோறும் பிரசுரங் களின் எண்ணிக்கை உலகில் ஏறிக்கொண்டே போகிறது. அதே போல ஒரு நூலகத்தில், பழைய வற்றைக் கழித்துக் கொண்டே போனாலும், கழிவைவிடப் புதுச் சேகரமே அதிகமாதலால், நூலக நிர்மாணம் விஸ்தரிப்புக்கு ஏற்றபடி ஆரம்பத்திலேயே எழுப்பப்படவேண்டும். இதில் அதிதாராளம் காட்டினாலும் கெட்டுவிடாது. இவ்வாறு செய்யப் படாததாலேயே பல நூலகங் கள் நாளாவட்டத்தில் பல வருஷங்களாகச் சிரமப்பட்டு சேகரித்து வைத்த அருமை யானவற்றைக் கூட இடமின்மை யால் புதுமெருகுப் புத்தகங் களுக்காகத் தள்ளிவிடுகின்றன. ஆகவே கட்டிடம், புத்தகப் பரண், மற்றத் தளவாடங்கள் யாவும் ஒரு சீராகவும், திருத்தி மாற்றி வைக்கக் கூடியனவா கவும், சங்கப் பலகை மாதிரி

விஸ்தரிப்புக்கு வளர்ந்து கொடுப் பனவாகவும் இருக்க வேண்டும்.

டில்லி இட நெருக்கடி :

சமீபத்தில் நமது ஜனாதி பதி பாபு ராஜேந்திர பிரசாத் டில்லி தஸ்தாவேஜி பாதுகாப்பு நிலையத்துக்குச் சென்றிருந் தார். அங்கு நவீன முறையில் அவை பாதுகாக்கப்படுவதைப் பார்த்தார். அபூர்வமான தஸ் தாவேஜிகள் பிலிம்களில் பிடித் திருப்பதைக் கண்டார். அத னால் இடமிச்சம் என்பதுடன், சுத்தமாகவும் இருக்கிறது. அடுத்த படியாக ராஜன்பாபு கூடை களில் பல தஸ்தாவேஜிகள் கிடப்பதைக் கண்டு அது ஏன் எனக் கேட்டார். இடமில்லாத தால் எனப் பதில் வந்தது. பெரிய இடத்திலேயே முக்கிய தஸ்தா வேஜிகளுக்கு இப்படி என்றால் மற்ற இடங்களின் இடநெருக் கடியைக் கூறவேண்டுமா? ஆகவே ஆரம்பத்திலேயே தாராள மான இடத்துடன் கட்டிடம் எழுப்ப வேண்டும்.

புத்தகாலயம் வளரும் ஸ்தா பனமாதலால் அன்றாடம் சேரும் புதுப்புதுப் புத்தகங் களைச் சேர்க்கவும் நீக்கப்படு வனவற்றை எடுக்கவும் புத்த கால யத்தின் விவரப்பட்டியல் தற்கால ரீதியில் கார்டு முறை யில் இருந்தாலே வளர்ச்சிக்கு ஏற்றபடி அவ்வப்போது பட்டி யலையும் நிலுவையின்றி வைக்க முடியுய. ஒரு புத்தம் புதிதாகச் சேர்க்கப்பட்டா லும், அல்லது ஆயிரக் கணக்கில் சேர்க்கப்பட்டாலும், அவற்றிற்

> படிக்க அறியாத வனைப் போன்றே படிக் கக்கூடாதவற்றைப் படிப் பபவனும் அறியாதவனா கிறான்.
>
> - தோரோ

கான கிரமஸ்தானத்தில் சேர்க் கக் கார்டு முறையே சரியான தாகும். அதொன்றிலேயே தட்சணமே சேர்க்கலாம். பட்டி யலை அச்சடித்து அது பழசாகி வீணாவதைவிட அதற்குச் செல வழிக்கும் பணத்தைக் கொண்டு புதிதாகப் பல புத்தகங்கள் வாங்கலாம். புத்தகப் பட்டியல் வியாபார முறையும் வளர்ச் சிக்கு ஏற்றதுபோல் இடங் கொடுப்பதாய் இருக்க வேண்டும்.

ஊரின் கலைக்கூடம்:

இதுவரை கூறப்பட்ட ஐந்து விதிகளின் படி நடக்கும் எப்புத்தகாலயமும் ஊருக்குத் தேவாலயம் என்ற தானே கூறவேண்டும்? ஆகவே அதன் அருமையை உணர்ந்தவர் பாராட்டாமலிரார். புத்தகாலயங் களின் பயனாய் எதிர்பாராத விதமாய்க் கல்லூரிகளிலும் அடை யாத ஞானத்தை அடைந்து முன்னுக்கு வந்தவர் பலருண்டு. உதாரணமாகச் சென்ற 1950 மே மாதம் 15 ஆம் தேதி சென்னைப் பத்திரிகைகளில் கீழ்க் கண்ட செய்தி காணப்பட்டது.

படிப்பு இன்பமாகும், அணியாகும் திறமையாகும்.

- பேக்கன்

''புஸ்தகத்தைப் படித்துப் பணக்காரர் ஆனவர், தம் ஆஸ்தியை லைப்ரரிக்கு எழுதி வைத்தார்.''

நியூயார்க், மே 14 ஜான் டி பாரி என்பவர் பொழுது போக்குவதற்காக பாஸ்டன் லைப்ரரியில் ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாராம். அதில் பணம் சேர்க்கும் வழி பற்றிக் கூறப்பட்டிருந்ததாம். அதன் படி நடந்து அவர் ஏராளமான ஆஸ்தியைச் சேர்த்துவிட்டார். அவர் தம் 86ஆம் வயதில் காலமாகிவிட்டார். தம் ஆஸ்தியான ரூ.6,67,000ஐயும் பாஸ்டன் லைப்ரரிக்கே எழுதி வைத்திருக்கிறார்.

இது பல அனுபவங்களில் ஒரே ஓர் உதாரணம். இது மாதிரி பல பேர் பல நூலகங்களில் பயன்பட்டுத் தமது ஆஸ்தியை அவற்றிற்கு எழுதி வைத்ததுண்டு. அதனால்தான் மேலை நாட்டு நூலகங்கள் செல்வத் தட்டுப்பாடு இல்லாது சிறப்பாக வேலை செய்கின்றன. நூலகங்களின் சக்தியை முதலில் பூரணமாக அறிந்தவர் சீமான் ஆன்ட்ரூ கார்னீகி. அவர் மேலை நாடுகளில் புத்தகாலயங்கள் வளரச் செய்த வரலாறு பிரமாதமாகும்.

புதுச் சேவை :

நூலகங்கள் இப்போது வர வர வெறும் புத்தக இரவல் ஸ்தாபனமாக மட்டும் இராமல் சமூக சேவா ஸ்தாபனமாக மாறி வருகின்றன. படிக்கத் தெரியாதவருக்கு, ஆனால் விஷயம் தெரிந்துகொள்ள விரும்புவோருக்குப் படித்துச் சொல்லும் பணியை அவை ஏற்றுக் கொண்டிருக்கின்றன.

நூலகம் வளரும் ஸ்தாபனம் என்ற அடிப்படைக் கருத்துடன் புத்தகாலய நிர்வாகம் புதுப்புதுச் சீர்திருத்தங்களுடன் அன்றாடம் வளர்ந்தோங்க வேண்டும். ஐந்து விதிகளின் தன்மை பரிபூரணமாகப் பரிணமித்து நிற்க, எத்துறையிலும் திறன், சிறப்பு, நன்மை இவை தலைதூக்கி இருக்க வேண்டும். இப்போது புத்தகங்களின் குறியீடுகளைக் காட்டும் லேபிள் ஒட்டுவதும் நின்று வருகிறது. புத்தகத்தின் மீதே எந்த இடத்திலும் எழுதக்கூடிய ஸ்டைலஸ்' என்ற பேனா ஏற்பட்டிருக்கிறது. இதனால் அழகு ஏற்படுவதுடன் லேபிள் ஒட்டும் தொல்லையும் செலவும் குறைகின்றன.

குறிப்பெடுப்புச் சேவை:

புத்தகசாலையின் அதிபர்கள் இப்போது பற்பல சஞ்சிகைகளிலும் வரும் நூதன விஷயங்களைப் பார்த்து அதற்குக் குறிப்பெடுத்து அவற்றையும் பாகுபடுத்திப் பட்டியல் படுத்தி வைக்கவேண்டும். முக்கியமாகக் கைத் தொழிற்

சாலைகளில் இத்துறை பெரிதும் வளர்ந்திருக்கிறது. உதாரண மாக, பிரிட்டனில் ஓர் அலுமினி யம் கம்பெனியில் இதற்கென இருபது பேருக்குமேல் இருக் கிறார்கள். அவர்கள் அலுமினிய விஷயத்துடன் நூலக விஷயத் திலும் விற்பன்னர்கள். உலகில் பல பாஷைகளிலும் பல புத்த கங்கள், சஞ்சிகைகளில் அலு மினியம் பற்றி வெளியாகின்றன. இவற்றில் வெளிவரும் விவரங் களை அவ்வப்போது கண்டு, அதில் முக்கியமான புதிய விஷயங்களை அலுமினியத் தொழிலில் ஈடுபட்ட பல்வேறு பிரிவினரின் கவனத்துக்கு அவ ரவர்கள் சம்பந்தப்பட்ட விஷ யங்களை எடுத்துத் தருவார்கள். இதைக் குறிப்புத் தொழில் எனக் கூறலாம். இது இப்பொழுது வெகுவாக அபிவிருத்தி ஆகி வருகிறது. நமது மத்திய சர்க்கார் விவசாய இலாகா நூலகத்தி லும் பெரிய புத்தகாலயம் இருந் தாலும் அதில் புத்தக விநி யோகத்தை விட, இந்தக் குறிப்புத் தொழிலே மேம்பட்டு ஓங்கி இருக்கிறது. ஆகவே இதற்குச் சிறந்த விபாகப் பட்டியல் திட்டம் வேண்டும்.

சென்ற வருஷம் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் உருக்குத் தொழி லைத் தேசீயமயமாக்குவது பற்றிக் காரசாரமாக விவா தம் நடந்தது. அப்போது பார்லிமெண்டின் புத்தகாலயமே அதற்குச் சாதகபாதக விஷயங் களை எல்லாக் கட்சி அங்கத் தினர்களுக்கும் திரட்டித் தந்தது. பாரிஸ் முதலிய பிரதேசத் தலை நகரங்களுக்கும் சென்று அங்குள்ள அநுபவ ஆராய்ச்சிகளையும் சேகரித்துத் தந்தார்கள். இத னால் மசோதா விவாதத்தின் போது அது ஒன்றாம் தரமாக விஷய ஞானத்துடன் இருந்தது.

சர்வஜன மண்டபம்:

இலக்கியச் சங்கங் களுக்கு நூலகம் தன்னிடத்தே இடம் தந்து அவை வேண்டும் வெளியீடுகளை அவ்வப்போது உதவி, வாசகர்களை அதிகம் ஈர்க்குவிக்கலாம். அத்தகைய சங்கங்களின் விழாக்களுக்குத் தன் மண்டபத்தை நூலகம் இரவல் தரலாம்.

சிறிய நாடக மேடை இருந்தால் இசைக் கச்சேரி களுக்கும் நாடக ஒத்திகை களுக்கும் இடமளிக்கலாம். தோட்டக்காரர்கள் சங்கம், ஆசிரியர் சங்கம் போன்ற தொழில் சங்கங்களுக்கும் இட மளிக்கலாம். அவற்றின் மூலமட் அடிக்கடி அரிய உபந்நியா சங்களுக்கும் அவசியமானால் படங்களுடன் ஏற்பாடு செய்ய லாம். அந்த அந்தச் சமயம் அது அது சம்பந்தப்பட்ட புத்தகங் களைப் பகட்டாக எடுத்து வைத்து, வந்தவர்களின் மனத்தை ஈர்க்க முயல வேண்டும். இத்துடன் விவாத சபை, வித்வத் சபை, பிரசங்க மேடையாகவும் நூலகம் விளங்கலாம். ஆகவே நூலகங் கள் ஊரின் 'ஷகரா'ன இடத்தில் இருக்க வேண்டும். ஊரின் பொது நல இயக்கங்களுக்கான பொது இடமாகப் புத்தகாலய மண்டபம் விளங்க வேண்டும். □

நூலகத் தந்தை அரங்கநாதன் வாழ்க்கைக் காவியம்

முத்தமிழ்க் கவிஞர்
டாக்டர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

3. பணிப்பருவம்

ஆசிரியருக்கு அன்று தந்த மரியாதை

(தங்கச் சிந்து - இரு சீரிரட்டை)

திண்ணையிலே பிள்ளைகளாம் தங்கமே! தங்கம்! - அங்கே
தெரியுதடி தலைப்பாகை தங்கமே! தங்கம்!
கண்ணிலொளி காட்டுகிறார் தங்கமே! தங்கம்! - அவர்
கையினிலே பிரம்பிருக்கும் தங்கமே! தங்கம்!

எண்ணெழுத்துப் பாடமெல்லாம் தங்கமே! தங்கம்! - ஆசான்
எடுத்தெடுத்துச் சொல்லுகிறார் தங்கமே! தங்கம்!
பண்ணுகிற சேட்டைகளைத் தங்கமே! தங்கம்! - பிள்ளைகள்
படிப்பதிலே மறந்துவிட்டார் தங்கமே! தங்கம்!

தெருவெங்கும் பள்ளிகளாம் தங்கமே! தங்கம்! - அன்று
தெருவிளக்கும் படித்ததுண்டு தங்கமே! தங்கம்!
ஒருவார்த்தை சொன்னவுடன் தங்கமே! தங்கம்! - ஊர்
ஒடிவந்து கும்பிடுமே தங்கமே! தங்கம்!

ஆசிரியர் சொல்லுக்குத் தங்கமே! தங்கம்! - மக்கள்
அன்றுதந்த மரியாதை தங்கமே! தங்கம்!
பேசினால் தீராது தங்கமே! தங்கம்! - ஊருக்குப்
பெரியவரே அவர்தானே தங்கமே! தங்கம்!

பணம்குவிக்கும் வேலைகளில் தங்கமே! தங்கம்! - பலர்
பழிப்புக்கும் இடமுண்டு தங்கமே! தங்கம்!
மனம்வணங்கும் வேலையென்றால் தங்கமே! தங்கம்! - அது
'வாத்தியார்' வேலையென்பார் தங்கமே! தங்கம்!

கல்விக்கண் திறப்பவர்தான் தங்கமே! தங்கம்! - ஆசான்
கண்கண்ட கடவுளென்பார் தங்கமே! தங்கம்!
வெல்லுகிற ஆசானாய்த் தங்கமே! தங்கம்! - அரங்கன்
வேலைசெய்ய விரும்புகிறான் தங்கமே! தங்கம்!

ஆசிரியர் பயிற்சிக்குப் பிறகு பணியில் சேருதல்

(ஒயிற் கும்மி)

உழைப்பில் வளர்ந்த ஒருவன் மகிழ
உயர்வை உரைக்கும் ஒருநாள் புலர்ந்தது!
உள்ளத்திலில் துள்ளிப்புகும்
வெள்ளத்தினை அள்ளித்தரும்
அழைப்புக் கடிதம் அவனை அடைந்தது!
ஆயிரம் பூங்குயில் வாழ்த்தின அன்று!
ஆழக்கடல் வாழத்தடை!
ஏழைக்கது தோழத்துணை!

மேலும் முயன்றிட மேலும் முயன்றிட
விண்ணின் முகிலில் விமானம் பறந்திடும்!
மெல்லத்தமிழ் சொல்லித்தர
செல்லக்கிளி வெல்லத்தினை
நாளும் மறந்திட நம்மை மயக்கிடும்!
நல்ல அரங்கனும் நம்மை மயக்கினான்!
நடுக்கத்தினை ஒடுக்கத்துணி!
அடுக்குப்புகழ் கிடைக்கப்பெறு!

மங்களூரில் கல்லூரிப்பணி

(குள்ளத்தாரா சிந்து)

மங்களூர் நகரத்தில் குள்ளத் தாரா! - அரங்கன்
வந்துபணி ஏற்றார் குள்ளத் தாரா!
இங்கினிமேல் இவரென்போம் குள்ளத் தாரா! - இன்றுமுதல்
ஏறுபுகழ் கொள்ளுகிறார் குள்ளத் தாரா!

அரசினர் கல்லூரி குள்ளத் தாரா! - அங்கே
அவர்உதவிக் கணக்காசான் குள்ளத் தாரா!
தெரியாத மாணவர்க்குக் குள்ளத் தாரா! - இவர்
தேர்போலத் தெரிகின்றார் குள்ளத் தாரா!

பாடநூல் சொல்வதுடன் குள்ளத் தாரா! - தம்
பணிமுடிக்க நினைக்கவில்லை குள்ளத் தாரா!
நாடுகின்ற சிந்தனைகள் குள்ளத் தாரா! - மாணவர்க்கு
நாள்தோறும் ஊட்டுகின்றார் குள்ளத் தாரா!

புதுமையுள்ள சோதனைகள் குள்ளத் தாரா! - எவரும்
போற்றுகின்ற வகையினிலே குள்ளத் தாரா!
மதிநுட்பம் கொண்டுசெய்யக் குள்ளத் தாரா! - வகுப்பு
மாணவரைப் பழக்கிவைத்தார் குள்ளத் தாரா!

கம்பியின்றிச் செய்திசொல்லக் குள்ளத் தாரா! - ஒரு
கருவிசெய்ய வைத்தாரே குள்ளத் தாரா!
மங்களூர் மக்களெல்லாம் குள்ளத் தாரா! - பார்த்து
மனம்மயங்கிச் சிலையானார் குள்ளத் தாரா!

பொதுக்கல்வி இயக்குநர் ஆய்வுக்கு வருகை

இயக்குநர் வந்தார்! இதுவரை செய்த
வியக்கும் பணிகளைப் பார்த்தார்! - செயத்தகும்
நல்லன எல்லாம் நடத்திடக் கண்டதால்
உள்ளம் குளிர்ந்தார் உவந்து!

இயக்குநரிடம் ஆசிரியர்கள் சார்பில் ஊதிய உயர்வு கேட்டார்!

(வளையற் சிந்து)

அரங் : கேளுமையா இயக்குநரே!
கீர்த்தியெல்லாம் பெற்றீர்! - நன்கு
நேர்த்தியுடன் கற்றீர்! - எங்கள்
வாழ்த்தினையும் பெற்றீர்! - உங்கள்
கேள்விக்குத் தக்கவிடை
கேட்டவுடன் பெற்றீர்!

இயக் : ஆளுகின்ற அறிவுடையீர்,
ஆற்றலுடன் திகழ்ந்தீர் - உங்கள்
ஏற்றமெலாம் புகழ்ந்தேன்! - எந்தச்
சிற்றமின்றித் திகழ்ந்தேன்! - என்னிடம்
அறிவிக்கும் செய்தியுண்டா?
யாருக்கும் குறைகளுண்டா?

அரங் : ஊதியம் போதவில்லை
உண்மையில் எங்களுக்கே! - புரியும்
எண்ணினால் உங்களுக்கே! - நன்மை
பண்ணுக எங்களுக்கே! - ஒரு
மாதச் செலவுவந்து
காதை முறுக்குதையா!

இயக் : ஆசிரியர் வேலையிலே
அதிகமாய்க் கேட்கலாமா? - ஊதியம்
இதற்குமேல் ஏற்கலாமா? - மேலே
எதற்குநான்? பேசலாமா? - நீங்கள்
யோசிக்க ஒருமொழி
உடன்பட்டு வருவீரா?

அதிகாரி வேலைதருவேன்!
அதுமகிழ்ச்சி தருமே! - ஊதியம்
அதிகரித்து வருமே! - பெரிய
அதிகாரம் பெறுமே! - விரும்பி
அதிகாரி ஆவதற்கே
குதித்தோடி வருவீரா?

அரங் : பணம்என்னை ஆள்வதற்குப்
பணிந்துவர மாட்டேன்! - வேறு
பணியில்தலை நீட்டேன்! - ஆசான்
பணியொன்றே கேட்டேன் - அதிகாரி
பணியெனக்கு வேண்டாம்!
பணம்எனக்கு வேண்டாம்!

இயக் : பிழைப்பதற்குத் தெரியவில்லை!
பேதைகளாய் இருப்பதென்ன? -கல்வி
மேதைகளாய் இருப்பவரே! - வறுமை
வேதனையாம் நெருப்பெதற்கு? - விரும்பி
அழைக்கின்ற அழைப்பினைநீர்
இழப்பதுவும் முறைதானோ ?

(வளரும்)

தானங்களில் சிறந்தது....!

டாக்டர் பூவண்ணன்

1957 ஜூன் மாதம் சென்னை விவேகானந்தா கல்லூரியின் தமிழ்த்துறையில் ஆசிரியராக இணைந்தேன். கல்லூரியில் நான் தினசரி தவறாமல் செய்யும் ஒரு செயல், கல்லூரியின் நூலகத்துக்குச் செல்வது.

எனக்குத் தேவையான நூலைத் தேடித்தான் நூலகத் துள் நுழைவது என்பது என் பழக்கமல்ல. நண்பர்களைச் சந் திக்கச் செல்வது போல், புதிய நண்பர்களை அறிமுகம் செய்து கொள்ளச் செல்வது போல் நூல்களைப் பார்க்க, புரட்ட, எடுக்க, படிக்க நூலகம் செல் வேன். தமிழ்ப்பகுதிக்குள்ளும் செல்வேன். அங்கெல்லாம் என் னென்ன நூல்கள் இருக்கின்றன என்று பார்ப்பேன்.

இப்படிப் பார்த்து வரும்போது, ஆங்கிலப் பகுதி யில் சில நூலக்ளில் ஒரே மாதிரி கையெழுத்தைப் பார்க்க நேர்ந்தது. எல்லா நூல்களுமே கனத்த அட்டையுடன் கூடிய விலை உயர்ந்த பதிப்புகள். அட்டையைப் புரட்டியதுமே அடுத்துத் தெரிவது உள் அட்டையுடன் ஒட்டியிருக்கும் தாள். இதனை 'Side paper' என்றும் 'End Paper' என்றும் வழங்குவார்கள்.

அந்தத் தாளில் இட மிருந்து வலமாக ஒரு ஏணி யைச் சார்த்தி வைத்திருப்பது போலக் கருப்பு மையில் ஒரு கையெழுத்து, கையெழுத்து என்றாலே புரியாமல் இருக்க வேண்டும், அல்லது முதல் எழுத்து மட்டும் தெளிவாகத் தெரிந்தால் போதும் என்று பலர் நினைப்பதுண்டு. ஆனால் இந்தக் கையெழுத்துப் படிக்க முடிகிறபடி தெளிவாகவே இருந்தது. படித்தேன்.

"ராணி வித்யாவதி தேவி"

இந்தப் பெயர் ஆங்கி லத்தில் இருந்தது. கையெழுத்து கண்ணில் ஒத்திக் கொள்ளும் படி இருந்தது என்று கூறுவார் களே, அதையும் மீறியது.

தெளிவான கை எழுத்து, அழகான கை எழுத்து ஏதோ ஓர் ஓவியம் போல நம்மை ஈர்க்கும் கையெழுத்து. அந்தத் தாளை உடனே புரட்ட விடாமல் சில நொடிகள் என் னைத் தடை செய்யும் கை எழுத்து.

ஆற்றில் மிதந்து வந்த ஒரு மயிரிழையைக் கொண்டு அதற்குரியவள் எப்படிப்பட்ட பேரழகி என்று ஓர் ஓவியன் உணர்ந்தானாமே அது போல அந்தக் கையெழுத்தைப் பார்த்தே 'இந்த ராணி வித்யாவதி தேவி பேரழகியாக இருக்க வேண்டும்' என்று நான் நினைத்தேன். அந்த உருவம் பற்றி கூடக் கற்பனை செய்த துண்டு.

ராணி வித்யாவதி தேவி கையெழுத்திட்ட நூல்கள் ஒன் றல்ல. இரண்டல்ல. பல! மிகப்பல! ராணி கையெழுத் திட்ட நூல்கள் மிக மிகத் தரமானவை. நோபல் பரிசு பெற்ற பேர்ள் பக்கின் எல்லா நாவல்களும் அந்த ராணி வாங்கிப் படித்திருக்கிறார்.

புத்தகங்களை,
நண்பர்களைத்
தேர்ந்தெடுப்பதுபோல்,
தேர்ந்தெடுத்துக்
கொள்ள வேண்டும்;

- தாமஸ் ஹூட்

இந்த ராணி யார்?

அவருடைய ஏராள மான நூல்கள், ஒரு குட்டி நூல கமாகவே அமைக்கத்தக்க நூல் கள் அங்கு எப்படி வந்தன?

நூலகரை விசாரித் தேன். அவர் அண்மையில்தான் அக்கல்லூரியில் சேர்ந்தவர். "எனக்கும் ராணியின் இத்தனை நூல்களைக் கண்டு வியப்புத் தோன்றியது. விசா ரித்தேன். ஆந்திராவைச் சேர்ந் தவராம் இந்த ராணி. சென்னையில் அவருக்கு ஏராள மான சொத்துகள். சென்னை யில் தங்கும் போது படிக்க வாங்கிய நூல்கள் அடுக் கடுக்காகக் குவிந்தபோது, அவற்றைச் சொந்த ஊருக்கு எடுத்துச் செல்லாமல், மாணவ ராகிய இளைஞர்க்கும் பயன் படட்டும் என்று கருதி, நம் கல்லூரி நூலகத்துக்குக் கொடையாக அளித்து விட்டா ராம்."

நூலகர் தந்த தகவலை அறிந்ததும் ராணி வித்யாவதி தேவியைப் போற்றினேன். நூல் களைத் தேடிச் சேர்ப்பது, செல்வம் சேர்ப்பது போலத் தான். அவற்றை வாரி வழங்கிய வள்ளன்மை வாயாரப் புகழ வேண்டிய தகுதி பெற்றது.

ராணி என்றாலே பணம் படைத்தவர் என்று

பொருள். இந்த ராணி படித்த வர். அழகான கையெழுத்தைப் பெற்றவர். அழகியாகவும் இருக் கக்கூடும். இவை அனைத்தை யும்விட அவர் ஓர் அறிவுஜீவி என்பதை அவர் தொகுத்த நூல்கள் கூறுகின்றன. அவர் பலருக்கு, பல நல்ல செயல் களுக்குப் பணத்தை வாரி வழங்கியிருக்கலாம். ஆனால் அந்தக் கொடைகள் அனைத் தையும் விட, நல்ல நூல்களைக் கல்லூரி நூலகத்துக்குத் தந்த கொடை பல மடங்கு உயர்ந்தது.

அதே விவேகானந்தா கல்லூரிக்கு நூல் கொடை தந்த மற்றொரு வள்ளலையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

நம் முன்னால் மத்திய நிதி அமைச்சர் டி.டி. கிருஷ்ண மாச்சாரி அவர்கள் ஒரு புத்த கப் பிரியர். படிப்பது அவருக் குப் பொழுது போக்காகவும் புனிதச் செயலாகவும் விளங் கியது. புத்தகக் கடை ஐய எங்கே பார்த்தாலும் உள்ளே புகுந்துவிடுவார். சில நூல் களையாவது வாங்கிக் கொண்டே வெளியே வருவார்.

டி.டி.கே. நூல்கள் வாங்குவதில் ஒரு தனி முறை இருந்தது.

அவரும் உறுதியாக பைண்ட் செய்த விலை உயர்ந்த

> எல்லா புத்தகங் களையும் விட நெந்த புத்தகம் இந்த பரந்த உலகம்தான். உலகத்தை விட உன்னதமான புத்த கம் வேறு கிடையாது.
>
> – C.என். அண்ணா துரை

நூல்களையே பெரும்பாலும் வாங்குவார். அப்படி வாங்கும் போது, ஒவ்வொரு நூலிலும் இரண்டு, இரண்டு படிகள் வீதம் வாங்குவார். இந்த இரண்டு படிகளில் ஒரு படியைச் சென்னையில் உள்ள தமது வீட்டிலும், மற்றொரு படியைத் தாம்பரத்தில் உள்ள தமது வேறொரு வீட்டிலும் வைப்பார். அவர் எந்த வீட்டில் இருந்தாலும் அங்கே அவரது நூலகம் இருக்க வேண்டும் என்று எண்ணிச் செயல்பட்ட அவரது உள்ளம் எவ்வளவு உயர்ந்தது! ஒரு நூல் ஒரு நண்பன்! இல்லை! இல்லை! ஒரு நூல் ஒரு ஞானி! எப்போ தும் ஞானிகளின் மத்தியில் இருக்க வேண்டும் என்று எண்ணி, அதன்படி வாழ்ந்த டி.டி.கே. வுக்கு எழுத்தாளர்கள்

தலை தாழ்த்தி வணக்கம் செய்ய வேண்டும்.

டி.டி.கே.யின் சொந்த நூலகம் வளர்ந்து வளர்ந்து பெரிதாகிவிட்டது. ஒரு கல்லூரி நூலகம் அளவு வளர்ந்து விட்டது.

இந்த இரண்டு நூலகங் களில் ஒன்றை அவர் விவேகா னந்தா கல்லூரிக்கு தமது நன்கொடையாக அளித்து விட்டார்.

விவேகானந்தா கல்லூ ரியின் நற்பேறு இது!

டி.டி.கே. அளித்த நூல் கள் அனைத்தையும் ஏற்கனவே உள்ள நூலகத்தில் அடைக்க முடியாது. அதனால் கல்லூரி யின் திறந்தவெளி அரங்கை ஒட்டி ஒரு பெரிய புதிய கட்டடமே கட்டப்பட்டது.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பது ஆன்றோர் வாக்கு. இதே கொள்கையோடு நூல்களைக் கல்லூரி நூலகத்திற்கு வழங்கிய ராணி வித்யாவதி தேவியும், டி.டி.கே. அவர்களும் ஆன் றோர்கள்! சான்றோர்கள்

தானத்தில் சிறந்தது அன்னதானம் என்றார்கள் முன்பு! தானத்தில் சிறந்தது, கண்தானம் என்றார்கள், பின்பு நூல்தான் மனிதனின் உள்ளத் துக்கு உணவு; அன்னம்! நூல்தான் மனிதனின் அறிவுக் கண்! அதனால் நூல்தானமே தானங்களில் சிறந்தது! நூல் தானம் செய்வோம்!

அறிவைத் தேடுகின்ற நெடும் பயணத்தில்
சலிப்பின்றி முன்னேறிக் கொண்டிருக் கின்றன.

(சலிப்பு எங்கே?)

_ கன்பூஷியஸ்

மனமே சிறந்த உபதேசி
காலமே சிறந்த குரு
உலகே சிறந்த புத்தகம்
கடவுளே சிறந்த நண்பன்

படிப்பதும் ஒரு கலை

"விமரிசனக் கலை" – க. நா. சுப்பிரமணியம்

நல்ல நூல்களைப் படித்து தெரிந்து கொள்வ தற்கும் ஒரு பயிற்சி அவசியம். எல்லாவற்றையும் கலை, கலை என்று கூறுகிற இக்காலத்திலே இவ்வாறு கூறுவது மிகையாகத் தோன்றலாம். ஆனால் படிப்ப தற்கு, படித்ததில் நல்லது எது?, நல்லது அல்லாதது எது? என்று தெரிந்து கொள்வதற்கு ஒரு பயிற்சி வேண்டியதாக இருக்கிறது.

இந்தப் பயிற்சி எப்படி வரும்?

சொல்லிக் கொடுத்து வருவதில்லை. படித்துப் படித்து நல்லது, கெட்டது இரண்டையும் படித்துப் படித் துப் பரிச்சயம் செய்து கொண்டு தரம் பிரித்துக் காணக் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஆங்கிலத்திலும், மற்று முள்ள ஐரோப்பிய மொழி இலக்கியங்களிலும் கிளா ஸிக்ஸ் என்று சொல்லிப் பலபல நூல்களை தேர்ந் தெடுத்து வைத்துவிடுகிறார் கள்.

இவற்றை அதிகம்பேர் படிப்பது கூடக்கிடையாது. அதாவது எல்லாவற்றையும் படிக்கவேண்டும் என்கிற அவசி யமும் கிடையாது. பொதுவாக இந்த நூல்களைப் பற்றிய அறிவு மக்களிடைய பரவியிருக் கிறது.

இந்த கிளாஸிக்லேயும் மட்டம், உயர்ந்தது, முதல் தர மானது என்று பிரித்துக் கொள்கிறார்கள். என்? எப்படி? ஒவ்வொரு நூலுக்கும் அதனதன் தரம் மதிப்பு ஏற்படு கிறது என்று சொல்வது கூடக் கடினம். ஏற்பட்டிருக்கிறது அவ்வளவுதான்.

இந்த மதிப்பீட்டை வைத்து ஒரு பத்து நூல்களைத் தெளிவாகக் கற்று உணர்ந்தவ னுக்கு இன்று வருகிற நூல் களையும் தரம் கண்டு கொள்ளக்கூடிய திறமை ஏற்படுகிறது. எந்த அம்சங்கள் காலத்தை மீறி நிற்கும். எந்த அம்சங்களைக் காலம் அரித் துத் தின்றுவிடும் என்று எந்த நூலைப்பற்றியும் குத்துமதிப் பாக உணர்ந்து சொல்ல முடிகிறது.

இப்படி உணர்ந்து கொள்வதையே விமரிசன

மனப்பாங்கு என்கிறோம் - படிக்கும் கலை என்கிறோம்.

தமிழிலும் (சம்ஸ்கிருதத்திலும்தான்) மனப்பாடம் பண்ணுகிற கலை பொதுவாக வந்திருக்கிறது. நாம் பிரித்துக் காண்கிற பயிற்சி ஏற்பட வில்லை. தரம் பிரித்து நமது பழைய நூல்களை கிளாஸிக்ஸ் எவை, வெறும் சக்கை எவை, தட்டை எவை என்று பார்ப்பதில்லை. அப்படிப்பார்ப்பது தவறு என்று எண்ணுகிறார்கள். பழசு எல்லாமே ஒரு தரத்து நூல்கள் போல பாவித்து விடுகிறார்கள்.

அபிராமி அந்தாதியும் ஒன்றுதான் - சேக்கிழார் பெரிய புராணமும் ஒன்றுதான் - திருக்குறளும் ஒன்றுதான் - திருவிளையாடற் புராணமும் ஒன்றுதான் - சிலப்பதிகாரமும் ஒன்றுதான் - மனோன்மணியமும் ஒன்றுதான் - மறைமலையடிகளும் ஒன்றுதான் - கம்ப ராமாயணமும் ஒன்றுதான் - சங்கநூல்களில் எல்லாப்பாட்டுகளும் ஒன்றுதான் என்று தரம் பற்றி ஒரு அபேதமின்மை ஏற்பட்டிருக்கிறது.

இது ஒழியும்வரை - தராதரம் தெரிய வரும்வரை - இலக்கியம் முன்னேறாது; வளராது. விமரிசன மதிப்பீடுகள் சாத்தியமில்லை; விமரிசன பூர்வமான இலக்கிய அறிவு மழுங்கிவிடும்.

பழசைத் தர நிர்ணயம் செய்துகொண்டு நல்லது இரண்டாந்தரமானது மூன்றாந் தரமானது என்று பிரித்துக் கிளாஸைத் தீர்மானம் செய்து கொண்டு படிப்புக் கலையில் தமிழர்கள் முன்னேற வேண்டும்.

அப்போதுதான் பழைய இலக்கிய அறிவு உயிருள்ளதாக இருக்கும் உயிரூட்டுவதாக இருக்கும். இப்போதுள்ளது போல வெறும் சுமையாக அமையாதிருக்கும். ஆமாம். இன்றைய பழந்தமிழ் அறிவுவெறும் சுமையாகத்தான் இருக்கிறது. ஒன்றிரண்டு பேரிடத்தில் தவிர, அது கலையாக, உயிருள்ள மரபாக மாறவேண்டும்.

"இலக்கியத்துக்கு ஓர் இயக்கம்" நவம்பர் 1985.

- க. நா. சுப்பிரமணியம்
காவ்யா, பெங்களூர்,
- தகவல் : "வேதி"

பாடிப் பழகு

பேராசிரியர். தங்க. சிகாமணி
57, சானகிராம் காலனி, அரும்பாக்கம்,
சென்னை - 600 106.

1. சமசதுரம்

சமசதுரம் வரையலாம்;
சரிசமமாய்ப் பிரிக்கலாம்;
நான்குசதுரம், கண்டதும்,
'நல்லதென்று கைதட்டலாம்!

2. நீண்ட சதுரம்



நீண்டசதுரம் போடலாம்;
மீண்டு மீண்டும் போடலாம்;
இப்படிக்கோ டிழுக்கலாம்,
இரண்டு 'ட'வைப் பார்க்கலாம்.

3. ஆசை கொள்வோம்

கொம்பெழுத்து, கோடெழுத்து,
கோணலான சுழியெழுத்து,
அரைவட்ட, முழுவட்ட,
அழகான சதுரெழுத்து!

இவையாவும் புள்ளியிலே
இசையோடு பிறந்ததன்றோ!
அழகாக எழுதுதற்கே,
ஆசைகொள்வோம் இன்று நன்றே!

பொள்ளாச்சிநசன்,

1, சம்பத் நகர்,
சூளேஸ்வரன்பட்டி,
பொள்ளாச்சி - 642 006.
Pin -642 006.

அன்புடையீர்,

வணக்கம். நலம்தானே. இதழ்9. (மே95) கிடைத்தது. தங்களின் மனிவிழா புகைப் படங்களைக் கண்டு மகிழ்ந்தேன். தங்களது இதழ் பொது நூலகங் களில் வாங்குவதற்கு ஆணை பிறப்பித்துள்ளது கண்டு மீண்டும் மகிழ்ந்தேன். ''அருணோதயம்'' பதிப்பக உரிமையாளர் திரு. அருணன் அவர்களது தொடர் உழைப்பும், இடைவிடாத தன் மையும் வணங்குதற்குரியது. அவரது விலாசம் தேவை. சி.செ. அனுப்புவதற்கும், அவ ரோடு தொடர்பு கொண்டு சிற்றிதழ்கள் அவரிடம் இருக் கின்றனவா? எனக் கேட்பதற் கும் தாங்கள் அவருக்கும் தகவல் தரவும், எனக்கு விலா சம் தரவும். நான் சி. செ. இதழ் களும், கடிதமும் அவருக்கு அனுப்புகிறேன், உதவவும்.

ந. பாண்டுரங்கன்
M.A., C.L.I.SC.,
அலங்காநல்லூர்.

அன்புடையீர்,

வணக்கம். மே'95 நூலகம் படித்தேன். நூலகம் வளரவும் மக்களிடையே அறிவு பெருகவும் உழைக்கிற நூலகர்களும் ''ஏணி, தோணி'' வரிசையில் சேர்க்கப் பட்டு விட்டனர். பதவி உயர்வும் கிடைக்காது பெற்ற பட்ட(ய) மும் வீண் என்ற நிலையில் அழுத்தப்படுவதை '' தூங்கி வழி யும் நூலகங்கள்'' கட்டுரையில் குறிப்பிட்டுள்ளீர்கள். நூலகத் தால் புகழ்பெற்றுவரும் ஏட்டா ளர்களும் அறிஞர்களும் கூட தங்கள் நூற்களும் ஏடுகளும் வாங்கப்படவில்லை என்றுதான் கூறுகின்றனரே தவிர அழுத்தப் படும் நூலகரின் அவல நிலைக்கு என்ன குரல் கொடுக் கின்றனர்? இன்று நூலகர்களும் ஏங்கினால் நாளை நாடு ஏங்கும்! இதனை தங்களைப் போன்ற நூலக ஞானிகள் எரிமலையாய்க் குமுறி எழுதிடல் வேண்டும். ஏனெனில் நூலகங்களையும், ''பனிபுரியும் நூலகர்களையும் வைத்துத்தான் ஒரு தேசத்தின் கல்வி நிலை மதிப்பிடப்படுகிறது.'' ஆனால் தமிழ்நாடுதான் இதை உணரவில்லை. ஏன்?

Thambi Srinivasan,
Author and Journalist,
F-63 - B, M.I.G. Flats,
Hari Nagar,
New Delthi - 110 064.

இரா. நடராசன்,
ஆசிரியர் (ஒய்வு),
76, ஆனைகட்டித் தெரு,
திருவண்ணாமலை - 1,
Pin - 606 601.

அன்புடன்

அன்பு டாக்டர் பெருமாள்,

வணக்கம். நல்வாழ்த் துக்கள். நேற்று கிடைத்த நூலகம் இலக்கியம் இதழில் என் படம் கடிதம் கட்டுரை எல்லாம் அச்சிட்டுள்ளீர்கள். நன்றி. இது ஒரு முக்கிய இதழ். கலைஞர் அமைச்சர்கள் படம் தங்கள் மணி விழா நிகழ்ச்சி என நிறையப் புழங்கும் இதழ். இதிலே பங்கு பெறுவது சிறப்புத்தான்.

தமிழில் ஆண்டுதோறும் வெளியாகும் புது நூல்கள் விவரப்பட்டியல் (எல்லாப்பதிப் பாளர் நூல்களும்) தங்கள் இதழில் கொண்டு வர இயலுமா? அது பெரிய சேவையாக இருக்கும்.

அன்புடன்,

தம்பி சீனிவாசன்.

அன்புடையீர்,

தங்கள் மணிவிழாவில் கலந்து கொள்ளும் பாக்கியம் கிட்டவில்லை. எனினும் மே, 1996 இதழில் மணிவிழா காட்சிகளைக் கண்டு அக மகிழ்ந்தேன். நல்ல உடல் நலத்துடன் நீடூழி வாழ பிரார்த்திக்கிறேன்.

அன்பு,

இரா. நடராசன்.

வாங்கி விட்டீர்களா?

எண்ணற்ற படிப்பு வாய்ப்புகள் எங்கெங்கே உள்ளன என்பது பற்றி பட்டிய -லிட்டுச் சொல்லும் விரிவான நூல்...

தொடர்ந்து கல்வி வாய்ப்பு -களைப் பற்றி இதழ்களில் எழுதிவரும் பேராசிரியர் நெல்லை கவிநேசன் தொகுத்தது.

பிளஸ் 2 முடித்த பின் என்ன படிக்கலாம்?

நெல்லை கவிநேசன், எம்.பி.ஏ.,

விலை ரூ. 60.

மேல் நிலைப் பள்ளி மாணவர் -கள் அனை -வரும் படிக்க வேண்டிய, படிப்பு தொடர்பாக வழிகாட்டும் நூல்.

(தபால் செலவு இலவசம்)
எம்.ஒ., அல்லது டி.டி., அனுப்பிப் பெறலாம் விபிபி கிடையாது.

வளர்தமிழ் பதிப்பகம்
(Valartamil Padhippagam),
44, ஆர்ஓபி மெயின் தெரு,
சென்னை - 600 014.
தொலைபேசி : 852 06 70

இனி எதைப் படிப்பது, என்ன படிப்பது என்று குழம்பும் மாணவர்களின் குழப்பத்தைத் தீர்க்கவே வெளி வந்திருக்கும் நூல்.

(ஆ) இவ்விதிகள் 1950 ஏப்ரல் 1 முதல் செயலுக்கு வந்தன.

2. (அ) மாநிலக் குழுவில் கீழ்க்கண்டவர்கள் இடம் பெறுவார்கள்.

1. கல்வி அமைச்சர்.
2. உள்ளாட்சித் துறை அமைச்சர்.
3. சுகாதாரம் - கல்வி - உள்ளாட்சித் துறையின் செயலாளர்.
4. மாநிலக் கல்வி இயக்குநர். (பொதுநூலக இயக்குநர் என்ற பதவியின் நிமித்தம்.)
5. இச்சட்டத்தை நிர்வகிப்பதில் பொதுக் கல்வி இயக்குநருக்கு உதவி புரிந்து வரும் தனி அலுவலர் (Special Officer)
6. சட்டமன்ற உறுப்பினர்கள் இருவர். (ஒருவர் சட்டப் பேரவையினாலும், மற்றொருவர் சட்ட மேலவையினாலும் தேர்ந்தெடுக்கப்படுவர்).
7. சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழு (Syndicate) தேர்ந்தெடுக்கும் ஒருவர்; அதே போல் அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு தேர்ந்தெடுக்கும் ஒருவர்.
8. சென்னை நூலகச் சங்கம், கேரள நூலகச் சங்கம், கன்னட நூலகச் சங்கம், ஆகியவற்றின் நிர்வாகக் குழுக்கள் ஒவ்வொன்றும் தேர்ந்தெடுக்கும் ஒவ்வொரு பிரதிநிதி.
9. கல்வி அமைச்சரால் நியமிக்கப்படுகின்ற, நூலகங்களைப் பற்றி நன்கறிந்த ஒருவர் (Specialist).
10. சென்னை நகர மாவட்ட நூலக ஆணைக் குழுவின் உறுப்பினர்களிலிருந்து கல்வி அமைச்சரால் நியமிக்கப்படும் ஒருவர்.
11. (அ) மாவட்டங்களின் நூலக ஆணைக்குழு உறுப்பினர்களிலிருந்து கல்வி அமைச்சரால் நியமிக்கப்படும் இருவர்.

(ஆ) மாநில நூலகக் குழுவின் தலைவராகக் கல்வி அமைச்சரும், செயலாளராகத் தனி அலுவலரும் இருந்து வருவர்.

(இ) சட்ட மன்றத்திலிருந்து இக்குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்படி சட்டசபைச் செயலாளரை

இயக்குநர் கேட்டுக் கொள்வார். கல்வி அமைச்சர் அவையில் கொண்டுவரும் ஒரு தீர்மானத்தின்படி உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

3. (அ) மூன்றாவது துணை விதியின்படி இக்குழுவிற்று நியமிக்கப்பட்ட அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், தேர்ந்தெடுக்கப் பட்ட அல்லது நியமிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு இவ்வுறுப்பினர் பதவியை வகிப்பார்கள். பதவியின் நிமித்தம் உறுப்பினராயிருப்பவருக்கு இக்கால வரம்பு கிடையாது.

(ஆ) பதவிக் காலம் முடிவதற்கு முன் ஏதாவது ஓரிடம் காலியாகுமானால், அவ்விடத்திற்கு வேறொரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கவோ அல்லது நியமிக்கவோ செய்யலாம். அவர் குறைக் காலத்திற்கும் பதவி வகிப்பார்.

(இ) ஒரு குறிப்பிட்ட பதவியை வகிப்பதன் காரணமாக இக்குழுவின் உறுப்பினராக இருக்கும் ஒருவர் அப்பதவியிலிருந்து விலகுவாரானால், இக்குழுவின் உறுப்பினர் பதவியும் முடிவடைந்து விடும்.

(FF) இக்குழுவின் உறுப்பினர்கள் மறு தேர்வுக்கோ அல்லது மறு நியமனத்திற்கோ தகுதியுடையவர்கள்.

4. (அ) இந்தக் குழுவிலும், இதன் உட்குழுக்களிலும் உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கு ஊதியம் ஏதும் கிடையாது.

(ஆ) இந்தக் குழு அல்லது இதன் உட் குழுக்கள் முதல் வகுப்பாகக் (சட்டமன்றக் குழுக்களிலிருந்து மாறுபட்டதாக) கருதப்படும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மற்ற அதிகாரப் பற்றற்ற உறுப்பினர்களுக்கும் (ஓய்வு ஊதியம் பெறுபவர்கள், அரசு அல்லாத இடங்களிலிருந்து ஓய்வு ஊதியம் பெறுபவர்கள் உட்பட) பின் கண்ட விகிதத்தில், கீழ்க்காணும் நிபந்தனைகளின் படி பயணப் படிகள் வழங்கப்படும்:-

இரயில் முதல் வகுப்பு + கட்டணம் ... மைலுக்கு 6 காசு.

மைல் கட்டணம் : மைலுக்கு 37 காசு.

நாள் படி:

1. கூட்டத்தில் கலந்து கொள்ளும் நாள் ஒன்றுக்கு ரூ.10 வீதம். (24 மணி நேரத்திற்குக் குறைவாகக் கூட்டத்தில் கலந்து கொண்டாலும் கூட.)

2. உறுப்பினர் தங்கியிருக்கும் இடத்தில் அல்லது அவ்விடத்திலிருந்து ஐந்து மைலுக்குள் கூட்டம் நடந்தால் நாள் படி ரூ.7.50.

குழுக் கூட்டம் நடைபெறுவதற்கு முந்தியும் பிந்தியுமுள்ள நாட்களுக்கு நாள்படி கிடையாது.

5. மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் அமைக்கப்படாமலும், அக்குழுக்களின் பிரதிநிதிகள் இக்குழுவிற்கு நியமிக்கப்படாமலும் இருந்தால் கூட இக்குழு செயல்படத் தொடங்கலாம்.

6. (அ) இக்குழுவின் கூட்டம் எவ்வெப்பொழுது எவ்வெவ்விடங்களில் நடைபெற வேண்டும் என்பதைக் கல்வி அமைச்சர் முடிவு செய்வார்.

(ஆ) கூட்டம் நடைபெறக் குறைந்தது ஐந்து உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.

(இ) கல்வி அமைச்சர் கூட்டத்திற்கு வராவிட்டால் வந்திருக்கும் உறுப்பினர்கள் தங்களில் ஒருவரை அக்கூட்டத்திற்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

(ஈ) 1. இக்குழுவுக்கு ஏற்படும் முக்கியமான சிக்கல்களை ஆராயவும், விதி 7-இன் (இ) (உ) (ஊ) (எ) (ஏ) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்களின் நடப்பு நிர்வாகம் குறித்து ஆலோசனைகள் கூறவும் உட்குழுக்களை இக்குழு நியமிக்கலாம்.

2. இந்த உட்குழுக்களுக்கான உறுப்பினர்கள் இக்குழுவின் உறுப்பினர்களாகவோ அல்லது உறுப்பினர்களாக அல்லாத நூலக வல்லுநர்களாகவோ அல்லது இருவருமாகவோ இருக்கலாம்.

7. இக்குழு பின்கண்ட விஷயங்கள் குறித்து அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுவோ, அதிகாரங்களைப் பயன்படுத்தவோ, கடமைகளை ஆற்றவோ செய்யலாம்:

(அ) 1. மத்திய நூலகத்தையும் அதன் கிளைகளையும் அமைத்தல். ஏற்கனவோ அரசாங்க நூலகம் ஒன்று கிளைகளுடன் இருந்தால், அதனை அதன் கிளைகளுடன் மத்திய நூலகமாக அங்கீகரித்தல்.

2. கிளைகள் உட்பட மத்திய நூலகத்தின் நிர்வாகத்திற்குரிய கொள்கையை வகுத்தல்.

(ஆ) சட்டத்தின் 18ஆம் பிரிவின் கீழ் விதிமுறைகளை வகுத்தல்.

(இ) 1. மாநிலத்தின் நூலக அமைப்புக்கு (Library System) தேவையான பலதரப்பட்ட, பயிற்சி பெற்ற ஊழியர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு ஊக்கமளித்தல்.

2. நூலகத்துறையின் பல்வேறு பிரிவுகளில் பயிற்சி பெற்றவர்களின் பட்டியல் ஒன்றைத் தயாரித்து, மாநிலத்திலுள்ள நூலகங்களுக்குத் தேவைப்படும்பொழுது அவர்களிலிருந்து தொழில்

நுட்ப ஊழியர்களை நியமித்துக் கொள்ளுதல்.

3. அங்கீகரிக்கப்பட்ட நூலகர்களென இந்தப் பட்டியலில் இடம் பெறுவதற்குப் பல்வேறு வகைத் தொழில் நுட்ப ஊழியர் களுக்குத் தேவையான கல்வி, தொழில் பயிற்சித் தகுதிகள் எவை என நிர்ணயித்தல்.

4. நூலகங்களின் தொழில் நுட்ப ஊழியர்களுக்கு அவர்களின் பணி வகைகளுக்கேற்றவாறு நியாயமான ஊதிய விகிதங்கள் மற்ற வேலை நிலைமைகள் குறித்து ஆலோசனைகள் கூறுதல்.

(ஈ) மாநிலத்திலுள்ள நூலகங்களுக்கு உதவும் வகையில் மாநில நூல் விவரத் தொகுதியின் பதிப்புரிமைப் பட்டியலையும், நூல் தேர்வுப் பட்டியல்களையும் வெளியிடுதல்.

(உ) 1. கூட்டுறவு முறையில் நூல்களை வகைப்படுத்துவதையும் (Classification), நூலக நூற்பட்டி தயாரிப்பதையும் (Cataloguing) ஊக்குவித்தல். மேலும், மாநிலத்திலும் இந்தியா முழுவதிலும் உள்ள நூலகங்களிடையே கூட்டுறவையும் ஒருங்கிணைப்பையும் ஊக்குவித்தல்.

2. நூலகக் கட்டிடங்கள், தளவாடங்கள், நூலக நுட்பங்கள் இவற்றுக்கான தரங்களை நிர்ணயிக்க உதவுதல்.

(ஊ) 1. ஆய்வு உதவு நூல்கள், (Reference Books), முதியோர் நூல்கள், குழந்தை நூல்கள் ஆகியவற்றை நூலகங்களின் பயனுக்கு ஏற்றவகையில் வெளிக்கொணர உதவி புரிதல்.

2. குருடர்களுக்கான நூல்களை வெளியிடவும், அவற்றைப் பயன்படுத்தவும் உதவுதல்.

(எ) மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் அளிக்கின்ற திட்டங்களை ஆராய்தல்.

(ஏ) பல்வேறு பகுதிகளில் எவ்வெப்பொழுது நூலகங்களை நிறுவ வேண்டும் என்பதை ஆராய்தல்.

மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள்: உறுப்பினர் நியமனம்

8. சென்னை நகர ஆணைக்குழுவில் உறுப்பினர் அல்லது உறுப்பினர்களின் இடம் காலியாக இருந்தாலோ, அல்லது காலியானாலோ, அதுபற்றி நூலக இயக்குநர் அல்லது சென்னை நகர நூலக ஆணைக் குழுவின் தலைவர், சென்னை மாநகராட்சிக்குத் தெரிவித்து காலி இடத்திற்குத் தேவையான எண்ணிக்கை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் படி கேட்டுக் கொள்வார். அதன்படி தேவையான் உறுப்பினர்களை

மாநகராட்சிதேர்ந்தெடுக்கும்.

9. சென்னை நகர நூலக ஆணைக் குழுவில் அரசாங்க நியமன உறுப்பினர் களின் இடம் ஏதேனும் காலியாகுமெனில் அதை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும்படி இயக்குநரை சென்னை நகர நூலக ஆணைக் குழுவின் தலைவர் கேட்டுக் கொள்வார்.

10. சட்டத்தின் 5 (2) (இ) பிரிவின் கீழ் ஏதேனும் காலி இடம் ஏற்படுமானால், அதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்காக இயக்குநருக்குத் தெரிவிக்க வேண்டும்.

11. மாவட்டங்களில் நூலக ஆணைக் குழுவில் மாவட்டக் கழகச் சார்பில் பணியாற்றும் உறுப்பினர் பதவி காலியாக இருந்தாலோ, அல்லது காலியானாலோ அது பற்றி அந்தந்த மாவட்டக் கழகத்திற்கு இயக்குநர் அல்லது மாவட்ட நூலக ஆணைக் குழுவின் தலைவர் தெரிவித்துக் காலி இடத்தை நிரப்பும்படி கேட்டுக் கொள்வார். அதன்படி மாவட்டக் கழகம் அக்காலி இடத்திற்கு ஓர் உறுப்பிரைத் தேர்ந்தெடுக்கும்.

12. மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு ஊராட்சித் தலைவர்களினால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் அல்லது உறுப்பினர்களின் இடம் காலியாக இருந்தாலோ, அல்லது காலியானாலோ, அது பற்றி மாவட்டத் தின் மாவட்ட ஊராட்சி அதிகாரிக்கு இயக்குநர் அல்லது மாவட்ட நூலக ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பார். அதன்பின், அவ்வுறுப்பினர் களைத் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளை மாவட்ட ஊராட்சி அதிகாரி அல்லது உதவி ஊராட்சி அதிகாரி செய்வார். அவர் இத்தேர்த லுக்கான ஊராட்சித் தலைவர்களின் கூட்டத்தை, இடம், நேரம் பற்றி ஏழு நாட்கள் முன்னறிவிப்புக் கொடுத்துக் கூட்டுவார்.

13. மாவட்ட ஆணைக்குழுவிற்கு நகராட்சி மன்றத்திலிருந்து தேர்ந்தெடுக் கப்படும் உறுப்பினர் அல்லது உறுப்பினர்களின் இடம் காலியாக இருந்தாலோ அல்லது காலியானாலோ, அவ்விடங்களை நிரப்பும்படி நகராட்சித் தலைவருக்கு இயக்குனர் அல்லது மாவட்ட நூலக ஆணைக் குழுவின் தலைவர் கேட்டுக் கொள்வார். அதன்பின் அவ்விடங்களுக்குத் தேவையான உறுப்பினர்களை நகராட்சி மன்றம் தேர்ந்தெடுக்கும்.

14. ஒரு மாவட்டத்திலிருந்து மாவட்ட நூலக ஆணைக்குழுவிற்கு இயக்குந ரால் நியமிக்கப்படும் 10 உறுப்பினர்களில் யாருடைய இடமாவது காலியாகுமானால், அந்த இடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி இயக்குநரை மாவட்ட ஆணைக் குழுவின் தலைவர் கேட்டுக் கொள்வார்.

15. இச்சட்டத்தில் 5(3) (2) பிரிவின் கீழ் வரும் ஏதாவது ஓரிடம் காலியாகு மானால் அவ்விடத்தை நிரப்ப நடவடிக்கை எடுக்கும்படி இயக்குநரை நூலக ஆணைக் குழுவின் தலைவர் கேட்டுக் கொள்வார்.

16. (அ) சென்னை மாநகராட்சி அல்லது மாவட்டக் கழகம் அல்லது நகராட்சி மன்றம் ஆகியவற்றிலிருந்து மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்குரிய தேர்தலானது இதற்காகவே கூட்டப்படும் ஒரு கூட்டத்தில் வாக்கெடுப்பு மூலம் நடைபெறும்.

(ஆ) மாவட்டத்தில் ஒவ்வொரு தாலுக்காவிலுமுள்ள ஊராட்சிகளின் தலைவர்களினால் மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப் பதற்குரிய தேர்தல் இதற்கெனக் கூட்டப்படுகின்றன கூட்டத்தில் வாக்கெடுப்பு மூலம் கீழ்க்கண்ட முறையில் தேர்ந்தெடுப்படு வார்கள்.

1. தாலுக்காவில் ஒரே ஒரு ஊராட்சி மட்டுமே இருக்குமானால், அதன் தலைவர் ஒரு வேட்பாளரை நியமித்து, அவ்வேட்பாளர் முறைப்படி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட வேண்டும்.

2. ஒரு தாலுக்காவில் இரண்டு அல்லது மூன்று ஊராட்சிகள் இருந்தால், அவற்றின் தலைவர்கள் ஒன்றுகூடி, தங்களுக்குள் விவாதித்து, ஒரு வேட்பாளரை நியமித்து, அந்த வேட்பாளர் முறைப்படி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட வேண்டும்.

3. வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பது பற்றி தலைவர்களிடையே ஓர் உடன்பாடு ஏற்படாவிட்டால், மாவட்ட ஊராட்சி அதிகாரி, அல்லது உதவி ஊராட்சி அதிகாரி முன்னிலையில் சீட்டுக் குலுக்கிப் போட்டு எடுத்து யார் பெயர் வருகிறதோ அவரை முறைப்படி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(இ) மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு உறுப்பினரைத் தேர்ந் தெடுப்பதற்கு நடைபெறும் ஊராட்சித் தலைவர்களின் கூட்டத் திற்கு மொத்தத் தலைவர்களில் குறைந்தது மூன்றில் ஒரு பங்குத் தலைவர்களாவது வந்திருக்க வேண்டும்.

அத்தியாயம் இரண்டு

உதவி பெறத் தகுதியுள்ள நூலகங்கள்

17. உதவி பெறும் நூலகங்களின் பதிவுப் பட்டியல் ஒன்று இயக்குநர் வைத்திருப்பார்.

18. இந்தப் பட்டியலில் இடம் பெறுவதற்கு ஒரு நூலகத்திற்குக் கீழ்க் கண்ட தகுதிகள் அமைந்திருக்க வேண்டும்:

(தொடரும்)

Dr. S.R. ரங்கநாதனின் நூலக இலக்கியம்

சாகா வரம்பெற்ற காவியங்கள்

நூலகர் ஒவ்வொருவரும் ரங்கநாதன் நூலக காவியங்கள் அனைத்தையும் வாங்கி படித்து, பயன்படுத்தி வீட்டு நூலகத்தில் பாதுகாத்து வைத்திருப்பது தலையாய கடமை. கடமையும் உரிமையும் இரு கண்கள் அல்லவா?

இன்று நடை முறையில் எத்தனை நூலகர்கள் .... பின்பற்றியுள்ளனர் ? புகைப்படத்துடன் தகவல் விவரங்களை எழுதுங்கள். நூலகம் இலக்கியம் வெளியிட்டு மகிழும்.

- ஆசிரியர்.

Philosophy of Library classification. 1989. P.133. Rs.40/- 1SBN81 - 85273 - 33 - 2

நூல் இல்லையானால்
ஆண்டவன் பேசுவதில்லை.
நீதி முடங்கிவிடும்.
அறிவியல் அசையாமல் நின்றுவிடும்.
கருத்துறைகள் ஊமையாகிவிடும்.
சரியாகச் சொன்னால் அனைத்துமே அந்தகாரத்தில் மூழ்கிவிடும்.

- பிராத்தலோனி.

Elements of Library. 1991. P:108. Rs.35/-. 1SBN 81 - 85273 - 29 - 4.

Prolegomena to library classification volume 1. 1990. Rs.150. P.640 1SBN 81- 85273 - 16 - 2.

உன்னை அதிகமாகச் சிந்திக்கச் செய்பவைகளே உனக்கு அதிகமாக உதவக் கூடியவை

- தியோடோர் பார்க்கர்

Colon classification. Ed 6. 1995. P.28+1.124+2.172+3.126. Rs.125/-. 1SBN 81 - 85273 - 31 - 6. (9 788185 273310)

A descriptive account of colon classification. 1990. P.300. Rs.75/- 1SBN 81 - 85273 - 46 - 4.

Classification and communication. 1992. P.291. Rs.95/- 1SBN 81 - 85273 - 27 - 8.

The five laws of library Science. 1989. P.449. Rs.95/- 1SBN 81-85273 - 07 - 3.

Library Manual. Ed.2. 1992. P.414. Rs.75/- 1SBN 81 - 85273 - 03 - 0

ஒரு நூல் முழுவதையும் வேகமாகப் படிப்பதைவிட, ஒரு பக்கத்தை நன்றாக உணர்ந்து கொள்வது மேலாகும்.

- மெகாலே.

Classificed catalogue code (with additional rules for dictionary catalogue code) Ed5. 1991. P.644. Rs.15/- 1SBN 81 - 85273 - 05 - 7.

Cataloguing practice. Ed. 2. 1995. 517. Rs.150/- 1SBN 81 - 85273 - 13 - 8 (9 788185 273136)

Library administration. Ed. 2. 1991. P. 678. Rs.150.00 1SBN 81 - 85273 - 22 - 7.

Library book selection. Ed. 2. 1989. P.436. Rs.125.00 1SBN 81 - 85273 - 25 - 1.

New education and school library. 1989. P.510. Rs.120. 1SBN 81 - 85273 - 35 - 9.

கல்வி வேறு, படிப்பு வேறு. கல்வியானது புத்தி, ஆத்மா சிறப்பு பெறச் சீர்பட்டு நிற்பது. வெறும் எழுதப் படிக்கத் தெரிந்திருப்பது மட்டும் அதைத் தந்து விடாது. தண்ணீர் மட்டும் ஆகாரமாகி விடாது. ஆனாலும் அவசியமானது தான். ஆனாலும் அதை விடவும் உணவு முக்கியமானது. அதைப் போலவே எழுதப் படிக்கத் தெரிவது மட்டும் கல்வியைப் பெற்றதாகாது.

- ராஜாஜி.

ஆழ்ந்த சிந்தனையில் அமரச் செய்யும் பண்புடைய நூல்களைப் பயில்வது நல்லது. அத்தகைய நூல்கள் இந்நாளில் சுமை என்று தள்ளப்படுகின்றன. இது நல் வாழ்க்கையால் நாட்டை வளர்ப்பதா காது. வெறும் தீக்களிப்பை எழுப்பும் ஏடுகள் பல குறும்புகளை வளர்த்து வாழ்க்கையை கெடுக்கும்.

- வி. கே.

கடிதம்

S. வெங்கட்ரமணி
வீரையன் கோட்டை,
குருவிக்கரம்மை,
பேராவூரணி,
தஞ்சை.
அ.கு.ஏண் - 614 802.

அன்புடையீர்,

வணக்கம்.

'நூலகம் இலக்கியம்' மே மாத இதழ் பார்த்தேன். மிக்க மகிழ்ச்சி.

''நல்ல காலம் பிறக்குது'' கவிதையும், கவிஞர் டாக்டர் ஆலந்தூர் கோ.மோகனரங்கனின் ''நூலகத் தந்தை அரங்கநாதன் '' பற்றிய கவிதையும் தேனாய் இனித்தது.

''நூலக நூல் பகுப்பியல்'' மற்றும் பதிப்பாளர் வரலாறு ''போராடி வெற்றி பெற்றேன்'' என்ற தலைப்பில் வெளியான ''அருணோதயம் அருணன்'' கட்டுரையும் மிகவும் பயனுடையது.

நூலகக் கல்வி பட்ட படிப்பு தமிழில் வரவேண்டுமென்ற கோரிக்கை வரவேற்கத் தக்கது. செய்தி விமரிசனம் பகுதியில் ''தூங்கி வழியும் நூலகங்கள்'' என்ற தலைப்பில் வந்த செய்திகள் பொது நூலகங்கள் - நூலகர்கள் - கவ டங்களையும், பள்ளிகளில் பலதுறை களுக்கு ஆசிரியர்கள் நியமிப்பது போல அனைத்து உயர், மேல் நிலைப் பள்ளிகளில் நூலகங்கள் ஏற்படுத்தி தகுதியான நூலகர்கள் நியமிக்க வேண்டுமென்ற கருத்தையும் வெள யிட்ட தங்களுக்கு என் மனமார்ந்த பாராட்டுக்கள்.

தமிழ்நாட்டில் 1400க்கும் மே பட்ட பகுதிநேர நூலகங்கள் இயங்கு கின்றன. இத்தகைய நூலகங்களுக்கு தங்களின் ''நூலக இலக்கியம்'' நூ துறைவழியாக கிடைக்க தாங்க ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.

இத்துடன் பகுதிநேர நூலகங்க - நூலகர்கள் பற்றிய விபரங்க தங்களின் பார்வைக்கும். ''பகுதிநே நூலகர்கள்'' சங்க கூட்டம் பற்றி செய்தியை தங்கள் (ஜூலை) இதழி வெளியிடுமாறு அன்புடன் வேண் கிறேன்.

தங்கள் அன்பள

சி. வெங்கட்ரமண

இணைப்பு :

1. நூலகங்கள் - நூலகர்க பற்றிய விபரம்.
2. பகுதிநேர நூலகர்கள் சங் கூட்டம்.

> முப்பது வயதுக்கு முன்னால் புத்தகங்களை விரும்பாதவன், பின்னால் அவைகளைப் படித்துப் புரிந்து கொள்வது கஷ்டம்.
>
> - கிளாரண்டன்ள

பகுதி நேர நூலகர் சங்க கோரிக்கை

தஞ்சை மற்றும் நாகை வட்ட பகுதி நேர நூலகர்கள் கத்தின் சார்பாக தமிழக நல்வர் மு. கருணாநிதி அவர் நக்கு பிறந்த நாள் வாழ்த்து ரிவிக்கப்பட்டது.

மேலும் பகுதி நேர நூலகங் ில் பணிபுரியும் பகுதிநேர லகர்கள் அனைவருக்கும் பணி வேடு உடனடியாக தொடங்க ண்டும் என்று தஞ்சை மற்றும் கை மாவட்ட பகுதிநேர நூலகர் சங்கம் அரசைக் கேட்டுக் ண்டுள்ளது. குறைந்த பட்ச நியமாக ரூ. 1,500/- வழங்கக் ாரியும், போனஸ் தொகை ங்க வேண்டுமெனவும் பொது கத் துறையில் ஏற்படும் காலி ங்களில் நிரப்பும்போது களுக்கு முன்னுரிமை தரவும் ட்டுக் கொள்ளப்படுகிறது.

மாவட்ட பகுதி நேர நூலகர் கள் சங்கத்தின் கட்டடம் வெள்ளிக் கிழமை தஞ்சையில் நடைபெற் றது. இக்கட்டத்தில் சங்கத்தின் மாவட்டத் தலைவர் வை. நம சிவாயம், துணைத்தலைவர் அ. இராமலிங்கம், இணைச்செயலர் எஸ். வெங்கட்ரமணி, பொருளர் எம். முருகேசன், நாகை மாவட் டத் தலைவர், எல்.கல்யாண சுந்தரம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் இணைச் செயலர் எஸ். வெங்கட்ரமணி நன்றி தெரிவித்தார்.

நாம் பெறும் கருத் துக் களின் அறிவைச் செயலில் பயன்படுத்தா விட்டால், நூல்கள் வெறும் பழைய தாள் களேயாம்.

- புல்வெர்.

மிகவும் சுயமாக எழுதும் ஆசிரியர்கள் அவ்வாறு சுயமாகப் படைப்பவர்களாக விளங்குவதன் காரணம், அவர்கள் புதிய விஷயத்தைக் கூறுகின்றனர் என்பதன்று, அவர்கள் தாம் சொல்ல விரும்பும் விஷயங்களை முன்பு எவரும் சொல்லியிராதவை போல எடுத்தவிப்பதே காரணம்.

- கதே.

கல்லூரி நூலகரின் உரிமைகள்

ஐயா,

தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் ஒழுங்குமுறைச் சட்டம். 1976ன் 2(10) சரத்தின் படி நூலகர் ஆசிரியராகக் கருதப்படுகிறார். ஆகவே சென்னை உயர்நீதி மன்றம் நூலகரை ஆசிரியராகக் கருதி ஆசிரியருக்கு வழங்குகின்ற எல்லாச் சலுகைகளையும் உரிமைகளையும் கொடுக்க வேண்டுமென்று ரிட்மனு 1107/79ல் அரசு கல்விச் செயலாளருக்கு 17.11.81 அன்று ஆணையிட்டன. ஆணையிடப்பட்டு 15 ஆண்டுகளாகியும், கல்விச் செயலாளர் நூலகருக்கு ஆசிரியர்கள் அனுபவிக்கிற உரிமைகளை வழங்க மறுக்கிறார்.

2(10) சரத்தின்படி நூலகரும் விரிவுரையாளர் போன்று ஆசிரியரே. ஆகவே விரிவுரையாளர் அனுபவிக்கிற எல்லா சலுகைகளையும் அனுபவிக்க நூலகருக்கு உரிமை உண்டு.

ஒரு துறை (Single Faculty) கல்லூரியில் பணிபுரியும் மூத்த விரிவுரையாளர் பெயர் வருகைப் பதிவேட்டில் முதல்வருக்கு அடுத்து கீழே எழுதப்படுகிறது. மேலும் முதல்வர் விடுப்பில் செல்லும்போது மூத்த விரிவுரையாளரிடம் தற்காலிகமாக தன் பொறுப்பை ஒப்படைத்துச் செல்கிறார்.

எமது கல்லூரியில் நான் மூத்த ஆசிரியராக இருப்பதால் எனக்கு மூத்த விரிவுரையாளர் அனுபவிக்கிற மேற்கண்ட சலுகைகளை வழங்க 15 ஆண்டுகளாக கல்விச்செயலாளருக்கு பலமுறை வேண்டுகோள் விடுத்தும் இன்னும் அவர் ஆணையிட மறுக்கிறார்.



மேலும் தமிழ்நாடு தனியார் ஒழுங்குமுறை விதி 8(3)-ன் படி மூத்த விரிவுரையாளர் அக்கல்லூரியின் ஆட்சிக் குழுவில் அங்கம் வகிக்கிறார்.

எங்கள் கல்லூரியில் நான் மூத்த ஆசிரியர், ஆகவே என்னை எங்கள் கல்லூரி ஆட்சிக் குழுவில் உறுப்பினராக போடுங்கள் என்று கல்விச் செயலாளருக்கு விண்ணப்பித்தேன்.

பயமே கரமான வாழ்வுக் கடலைக் கடக்க நல்லவர்கள் தயாரித்த திசை காட்டியும், தொலை நோக்கியும் கோண அளவு மானியுமாய் விளங்கு பவையே நூற்கள்.

பழைய ஆடையை அணி; புதிய நூலை வாங்கு.

- பெல்ப்ஸ்

கல்விச் செயலாளருக்குத் தெரிய வில்லை. நான் நம்பவில்லை!

தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு. கே.ஏ. நம்பியார் அண்மையில் நடந்த கலெக்டர் மாநாட்டில் கூறினார். 'ஒருகாலத்தில் இந்தியாவிலேயே இந்த மாநில அரசு நிர்வாகம் மிகச் சிறந்தது என்று கருதப்பட்டது. அது பல்வேறு காரணங்களால் தனது சிறப்புத் தன்மையை இழந்து விட்டது.''

எவ்வளவு இழந்துவிட்டது என்று ஆய்வு செய்ய கல்விச் செய லாளர் அரசாணை நாள் 15.04.1996-ஐ எடுத்துக் கொள்ளலாமா?

ஆ. முத்தையா (14.6.96)
நூலகர்
இலட்சுமி கல்வியல் கல்லூரி
காந்திகிராமம் 624 302.

ஆனால் அவர் அரசாணை எண்: 290 நாள் 15.04.96 ஒரு விநோதமான விளக்கம் அளித்தார். எனக்கு இந்தச் சலுகைகளையும் மறுத்துவிட்டார். அவர் கூறுகிறார். சட்டம் (2) (10) சரத்தின்படி நூலகரும் ஆசிரியரே. ஆகவே நூலகர் சட்டப்படி ஆசிரியர் அனுபவிக்கிற எல்லா சலுகை களையும் பெறத் தகுதியுடையவர் தான். ஆனால் விதி 8(3) இடம் கொடுக்கவில்லையே! நான் என்ன செய்ய?

விதி (Rule) சட்டத்திற்கு (Act) உட்பட்டதே, சட்டம் வழங்குகிற உரிமைகளை மறுக்க விதிக்கு என்ன தகுதி உண்டு?

இந்த சிறிய சாதாரண விளக்கம் கூடவா ஐ.ஏ.எஸ். அதிகாரியான

நூல் ஒரு தோட்டம்;
பழச்சோலை;
களஞ்சியம்;
வழித்துணை;
அறிவுரை தரும்
நல்லாசான்;

- பீச்சர்.

செய்தி விமரிசனம்

தினமணி, சென்னைப் பதிப்பு 14-6-1996 நாளிதழில் பொது நூலக இயக்கத்தில் உள்ளதாக பலமுறை கேடுகளை பட்டியலிட்டுள்ளார் - திரு. க. முருகன், (செயலர் காவேரிப் பட்டணம் நூலகச் சங்கம்) என்பவர்.

திரு. க. முருகன் குறிப்பிட்டுள்ள தகவல்கள் பரிசீலிக்கப்பட வேண்டிய வைதாம். தினமணி, இவரின் முழு முகவரியையும் வெளியிட்டிருந்தால், அவருடன் தொடர்பு கொள்ளவும், மேலும் அவரின் புதிய முயற்சிகளுக்கு விடிவு காலம் பிறக்க வழிவகை காணவும் நூலகம் இலக்கியம் மாத இதழ் ஆவலாக உள்ளது.

உரிமையும் கடமையும் இரு கண்கள் அல்லவா?

திரு. க. முருகன் உரிமைகளைப் பட்டியல் இட்டுவிட்டு, இதுவரை பொது நூலகத் துறையில் பணி புரிந்த வர்கள், புரிபவர்கள் வாசகர்களுக்கு செய்த சிறப்பு சேவைகளையும் பட்டிய லிட்டிருந்தால் நலமாயிருந்திருக்கும் என்பார் அமரர் ஏஸ். ரங்கநாதனின் ஆவி.

அவர் கூறியுள்ள குற்றச்சாட்டு களுக்கு நூலகச் சமுதாயமே காரணம் என்கிறது ''நூலகம் இலக்கியம்'' ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு! ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே! தாழ்வு வந்தபின் புலம்புவதில் அர்த்த மில்லை. கால(த்தின்) கட்டாயம் இது.

திடீரென முதலமைச்சர் அமரர் எம்.ஜி.ஆர் கன்னிமாரா நூலகத்தில் நுழைகிறார். பொது நூலக இயக்குநர், நூலகர் இருவரையும் இடைக்கால பதவி நீக்கம் செய்கிறார். இது அன்று நடந்தது.

அன்று ஒன்றுபட்டு குரல் கொடுக் கத்தவறிய நூலகத் தொண்டர்கள் இன்று குமுறுவது .....

தமிழக நூலக இயக்கம் சீர்கேடடைந்த நிலையில் உள்ளது என்ற முருகனின் வாசகம் - தூங்கி வழியும் நூலகச் சங்கங்களினாலேயே உருவா னதுதான். அன்று சங்கம் குரல் கொடுத் திருந்தால், இந்த நிலை ஏற்பட்டி ருக்குமா ?

இந்த நிலைமைக்கு நூலகச் சங்கம்தான் காரணம் என்கிறது நூலகம் இலக்கியம்.

இனியாவது, தமிழக நூலகச் சமுதாயம் ஒன்றுபட்டு, ஒரே குரலில் பேச முன் வருமா?

ஒற்றுமையே வலிமை!

தமிழக நூலகர்களே,
தொண்டர்களே

ஒன்றுபடுங்கள்! ஒரே குடையின்

கீழ் வாருங்கள். நல்லதை உடன்

அடைவோம்

''நூலகம் இலக்கியம்'' ஒரு
இயக்கம் என
உணர்வோம்.

''நூலக ஞானி'

நூலகம் இலக்கியம்
6, மு.வ. தெரு
அரும்பாக்கம்
சென்னை - 600 106

ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ்
2, முத்துக கிருஷ்ணன் தெரு,
ந.பை.என்.1040, பாண்டி பஜார்,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 828 1902

- **பஞ்சாங்க நுணுக்கங்கள்.** டிசம்பர் 1995. எட்டையபுரம் க. கோபி கிருஷ்ணன். பதிப்பாசிரியர் - விகரு. இராமநாதன். பக்கம் 184. ரூ.25.
- **புத்திர தோஷமும் நிவர்த்தி பரிகாரமும்.** டிசம்பர் 1995. எட்டையபுரம். க. கோபிகிருஷ்ணன். பக்கம் 120. ரூ.20.
- **நவீன ஜாதக அலங்காரம்.** ஜூலை 1995. எட்டையபுரம் க. கோபிகிருஷ்ணன். பக்கம் 303. ரூ.60.
- **நவக்கிரகப் பார்வைகளின் பலா பலன்கள்.** நவம்பர் 1995. 'பிரகஸ்பதி. பக்கம் 148. ரூ.22.
- **இயற்கை உணவே நோய் தீர்க்கும் மருந்து.** மு.ஆ. அப்பன். ரூ.100.
- **வாஸ்து சாஸ்திரம்.** ரூ.50.
- **அனுபவ ஜோதிடம்.** மூன்று பாகங்கள். ரூ.106.
- **தியானம்.** ரூ.36.

கற்பகம் புத்தகாலயம்,
18, ராஜாபாதர் தெரு,
தியாகராயநகர்,
சென்னை - 600 017.

- **நீரிழிவு நோயும், மருத்துவமும்.** டிசம்பர் 1995. டாக்டர் சு. நரேந்திரன். பக்கம் 152. ரூ.30.
- **ஹாம்லெட்.** (தமிழ்) டிசம்பர் 1995. ஷேக்ஸ்பியர். தமிழில் கவிஞர். புவியரசு. பக்கம் 216. ரூ.40

ஸ்ரீ துர்க்கை பப்ளிகேஷன்ஸ்
21, மதுரை வீரன் கோயில் தெரு,
தி. நகர், சென்னை - 600 017.

- **அருள் தரும் பூமாத்தம்மன்.** (ஆலயத்தின் திருத்தல வரலாறு). 1995.

கோ. ஜெயச்சந்திரன். பக்கம் 112. ரூ.22.

📖 **மலர்ந்த பூக்கள்.** செப்டம்பர் 1995. வித்வான். கோ. தனபாலன். பக்கம் 107. ரூ.20.

📖 **இல்லாமிய வாழ்த்து மடல்கள்.** ஏப்ரல் 1995. கவிஞர் அ. அசெப்பை அப்துல்லா. பக்கம் 34. ரூ.10.

📖 **தோழமை பாடும் கவிதைகள்.** ஏப்ரல் 1995. பக்கம் 68. ரூ.20.

📖 **வசந்தம் தேடும் கவிதைகள்.** 1993. பக்கம் 188. ரூ.23-50.

📖 **சமுதாயப் புரட்சி.** 1991. இ.ரா.சந்திரன். பக்கம் 120. ரூ.16.

📖 **தெள்ளாறெறிந்த நந்திவர்மன்.** டிசம்பர் 1994. தெள்ளாறு இ.மணி. பக்கம் 103. ரூ.17-50.

📖 **தையல் கலை ஆசான்.** 1988. டி. சுகுமார். பக்கம் 142. ரூ.15.

📖 **தெய்வீகத் திருமணங்கள்.** ஜூலை 1988. வித்வான் எம். நாராயண வேலுப்பிள்ளை. பக்கம் 216. ரூ.20.

மூல்லை நிலையம்
43, புதுத்தெரு, மண்ணடி,
சென்னை - 600 001.

📖 **பத்துப்பாட்டு. பாகம் 1.** டிசம்பர் 1995. தெளிவுரை: வித்வான் எம். நாராயண வேலுப்பிள்ளை. பதிப்பாசிரியர் : பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை. பக்கம் 216. ரூ.35.

📖 **பத்துப்பாட்டு. பாகம் 2.** டிசம்பர் 1995. பக்கம் 236. ரூ.40.

📖 **சென்னை மாநகர்.** பதிப்பு 2. 1978. மா.சு. சம்பந்தம். பக்கம். 271. ரூ.10. தமிழர் பதிப்பகம், 243 (81) லிங்கிசெட்டித் தெரு, சென்னை - 600 001.

📖 **தமிழ் இதழியல் சுவடுகள்.** 1990. மா.சு சம்பந்தம். பக்கம் 272. ரூ.30. தமிழர் பதிப்பகம், சென்னை - 1.

📖 **தமிழர் வாழ்வில் எம்.ஜி.ஆர்.** 1990. பதிப்பாசிரியர்: வி. கேசவலு. பக்கம் 232. ரூ.70.

📖 **வலவனின் நாடக விருந்து.** 1995. ஓவியப் பாவலர் மு. வலவன். முத்தையன் பதிப்பகம். 65, பெரிய தெரு, சென்னை - 5. பக்கம் 128. ரூ. 25.00.

📖 **தமிழ்த் தொண்டர் தமிழ்க்கா.சு.** நவம்பர் 1995. தொகுப்பு மீ.ச. இளமுருகு பொற் செல்வி. தமிழ்க்கா. சு. நினைவு இலக்கியக் குழு. கடம்பர் கோயில் குளித்தலை - 639 104. தீரன் சின்னமலை மாவட்டம்.

''நண்பர் பூவண்ணன், கவிஞர், நாடக ஆசிரியர்,
குழந்தை இலக்கியப் படைப்பாளர்,
புதின ஆசிரியர் என இலக்கியத்தின்
பல துறைகளிலும் காலூன்றிப்
பெருமை பெற்றுள்ளார்.
அவருடைய படைப்புகள் அனைத்துமே
தமிழுக்கு அணி சேர்ப்பவை''

- சிலம்பொலி சு. செல்லப்பன்



Edited Printed and Published by NOLAGAGNANI Dr.Pa.PERUMAL M.A.,M.Lib.sc., Ph.D., From 6, Mu.Va. Street, Arumbakkam, Madras - 600 106. Ph: 4845034. Printer P. AYYASAMY at Thirumalai Deivam Art Printers, 14, Yadaval Street, Aminjikarai, Madras - 600 029. Laser by Galaxy Computer System. Ph: 483 2571.

Please send Annual Subscription Rs. 120.

ரங்கநாத சித்தாந்தம்

''கிரந்தாலய சாஸ்திரத்தைப் பற்றி விஸ்தாரமாய் முதன்முதலில் தமிழில் வெளிவரும் புத்தகம்'' எனகூறும் நூலகத் தந்தை எஸ். ஆர். ரங்கநாதன் முன்னுரையுடன்.

ஆசிரியர்

த. கிருஷ்ணமூர்த்தி

பிரதிகளுக்கு எழுதவும் :

நூல்க இலக்கியம்

6, மு.வ. தெரு,
அரும்பாக்கம்,
சென்னை - 600 106.

ரூ. 15/-

NOOLAGAM ILAKKIYAM Tamil Monthly July, 1996
Regd No. TN/MS/N/922 R.Dis 4441/95.E. Ph. : 484 5034

நூலகத்தில் மௌனக்கடல் 'தேடல்'
காலவிரயம் கூடாது